# திருவள்ளூர் மாவட்டத் தொல்லியல் கையேடு



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008
2011- திருவள்ளுவர் ஆண்டு 2042

# திருவள்ளூர் மாவட்டத் தொல்லியல் கையேடு

# திருவள்ளூர் மாவட்டத் தொல்லியல் கையேடு

பதிப்பாசிரியர்

**முனைவர் சி. பி. சிங், இஆப,**

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

ஆசிரியர்

**முனைவர் சீ. வசந்தி**

தொல்லியல் அலுவலர் (பொ)

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை- 600 008

2011 - திருவள்ளுவர் ஆண்டு -2042

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| TITLE | : | **Tiruvallur Mavatta Tholliyal Kaiyedu (Tiruvallur District Archaeological Guide book)** |
| Editor | : | Principal Secretary & Commissioner |
| Author | : | Dr. S. Vasanthi |
| Copy Right | : | Tamilnadu State Dept. of Archaeology |
| Subject | : | History |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Publication No. | : | 246 |
| Year | : | 2011 |
| No. of Copies | : | 500 |
| Type Point | : | 12 |
| No. of Pages | : | 132 |
| Paper Used | : | 80Gsm Maplitho |
| Printer & Publisher | : | State Dept. of Archaeology, Tamil Valarchi Valagam, Halls Road, Egmore, Chennai - 600 008. |
| Price | : | Rs. 25.00 |

# பொருளடக்கம்

1. திருவள்ளூர் மாவட்டத் தொல்லியல் கையேடு 1

2. தொல்பழங்காலம் 4

3. பெருங்கற்காலம் 16

4. திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள
வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர்கள் 23

5. பிற்சேர்க்கை 78

6. நிழற்படங்கள் 85

## அட்டைப்பட விளக்கம்

முன் அட்டை : கஜபிரஷ்ட விமானம், வடிவுடையம்மன்

திருவொற்றியூர்

பின் அட்டை : துவார பாலகர்கள்

(வழவழுப்பான கருப்புநிற கருங்கல்)

சி.பி. சிங், இஆப,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008

நாள் : 09-03-2012

# பதிப்புரை

மாவட்ட வரலாறுகள் அவை குறித்த விவரங்கள் ஆங்கிலேயர்களால் 'கெஜட்டியர்' வெளியிடப்பட்ட நூலில் இடம் பெறும். இவை பொதுவாக ஒவ்வொரு மாவட்டத்தின் விவரங்களைத் தெரிவிப்பவனையாகவே இருக்கும். இந்நூலின் கடைசிப்பகுதியில் வரலாறு எனத்தனிப் பகுதி ஒதுக்கப்பட்டு அதில் பல வரலாற்றுச் செய்திகள் இடம் பெற்றிருக்கும். இதனைத் தவிர மாவட்ட, வட்டார வரலாறுகளை அறிய நூல்கள் ஏதுமில்லாதநிலையில் தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறை தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களின் தொல்லியல் செய்திகளை அறிஞர்கள், ஆய்வாளர்கள் மட்டுமில்லாது, பொது மக்களும் அறியும் வண்ணம் 'மாவட்டத் தொல்லியல் கையேடு' என்றப் பெயரில் நூல்களை வெளியிட்டு வருகின்றது. இதுவரை 24 மாவட்டக் கையேடு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. தற்போது 2010-11 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் 5 (கரூர், சேலம் ஈரோடு, நாகப்பட்டினம், திருவள்ளூர்) மாவட்ட கையேடு நூல்கள் வெளியிடப்படுகின்றன. இதில் சென்னைக்கு மிக அருகில் உள்ள திருவள்ளூர் மாவட்டம் குறித்த தொல்லியல் வரலாற்றினைத் தெரிவிக்கும் வகையில் எழுதப்பட்டுள்ள இந்நூல் இம்மாவட்டத்தினைப் பற்றி அனைவரும் அறிந்துகொள்ள பயனுள்ளதாக அமையும்.

இந்நூலினை எழுதியும் பதிப்பிக்கும் பணியினையும் முன்னின்று ஏற்றுச் செய்த முனைவர் சீ. வசந்தி அவர்களுக்கும் இந்நூலினை நல்லமுறையில் கணினி தட்டச்சு செய்து அட்டைப்படம் வடிவமைத்த அச்சுக்கோர்ப்பாளர் திருமதி தே. சத்தியவதி மற்றும் அச்சுப்பணியினை மேற்கொண்ட அச்சுப்பிரிவினர் ஆகியோரின் பணிகள் பாராட்டுக்குரியது.

இந்நூல், படிக்கும் அனைவருக்கும் பெரிதும் பயனுள்ளதாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

# திருவள்ளூர் மாவட்டத் தொல்லியல் கையேடு

## அமைவிடம்

திருவள்ளூர் மாவட்டம் வடக்கிலும் 12°15′ மற்றும் 13°15′ அட்சரேகைக்கு இடையிலும் 79°15′ மற்றும் 80°20′ தீர்க்கரேகைகளுக்கு இடையில் கிழக்கிலும் உள்ளது.

இம்மாவட்டத்தின் தெற்கில் காஞ்சிபுரம் மாவட்டமும், மேற்கில் வேலூர் மாவட்டமும், கிழக்கில் வங்காளவிரிகுடா கடலும், வடக்கில் ஆந்திர மாநிலமும் அமைந்துள்ளன. இம்மாவட்டம் 3422 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடையதாகத் திகழ்கின்றது.

கடற்கரையை ஒட்டியப் பகுதிகள் தவிர பிற இடங்களில் சிறிய குன்றுகள் காணப்படுகின்றன. அங்காங்கே சிறிய பாறைகள் மற்றும் மணல் கலந்த மண் காணப்படுவதாலும் இப்பகுதி சிறிது வளம் குன்றியுள்ளது. அதிக அளவில் தாதுப்பொருட்களும் கிடைக்கவில்லை. மக்களின் முக்கியத் தொழில் விவசாயமாகும். நெல், கம்பு, ராகி, பச்சைப்பயிர், உளுந்து, கரும்பு, வேர்க்கடலை ஆகிய பயிர்களுடன் மாம்பழம், கொய்யா, காய்கறிகள் ஆகியவைகளும் விளைவிக்கப்படுகின்றன.

## பெயர்க்காரணம்

திருவாகிய இறைவன் எவ்வுள் (அதாவது எங்குள்ளார் . . . .) என்று வினவியதால் இவ்வூர் திருஎவ்வுள் என்று அழைக்கப்பட்டுப் பின்னர் திருவள்ளூர் என வழங்கப்பட்டுள்ளது.

## திருவள்ளூர் மாவட்டத்தில் கீழ்கண்ட நிர்வாகப் பிரிவுகள் தற்போது உள்ளன

வட்டங்கள்

1. பூந்தமல்லி
2. அம்பத்தூர்
3. மாதவரம்
4. பொன்னேரி
5. திருவள்ளூர்
6. ஊத்துக்கோட்டை
7. கும்மிடிபூண்டி
8. திருத்தணி
9. பள்ளிப்பட்டு

இம்மாவட்டத்திலுள்ள 1. ஊராட்சி ஒன்றியங்கள், 2. நகராட்சிகள், 3. பேரூராட்சிகள் மற்றும் கிராம பஞ்சாயத்துகள் 566-ம் உள்ளன. அவை கீழ்க்காணும்படி உள்ளன.

| 14 | 12 | 13 |
|---|---|---|
| 1.வில்லிவாக்கம் | 1. திருவள்ளூர் | 1. சின்னசெக்காடு |
| 2. புழல் | 2. ஆவடி | 2. மீஞ்சூர் |
| 3. சோழவரம் | 3. அம்பத்தூர் | 3. நரவாக்குப்பம் |
| 4. மிஞ்சூர் | 4. மாதவரம் | 4. பொன்னேரி |
| 5. கும்மிடிபூண்டி | 5. கத்திவாக்கம் | 5. போரூர் |
| 6. எளப்புரம் | 6. திருவெற்றியூர் | 6. புழல் |
| 7. பூண்டி | 7. திருத்தணி | 7. திருநின்றவூர் |
| 8. திருவள்ளூர் | 8. பூந்தமல்லி | 8. ஊத்துக்கோட்டை |
| 9. பூந்தமல்லி | 9. திருவேற்காடு | 9. ஆரணி |
| 10. கடம்பத்தூர் | 10. மதுரவாயில் | 10. கும்மிடிபூண்டி |
| 11. திருவாலங்காடு | 11. வளசரவாக்கம் | 11. பள்ளிபட்டு |
| 12. திருத்தணி | 12. மணலி | 12. திருத்தணி |
| 13. பள்ளிப்பட்டு | | 13. திருமழிசை |
| 14. இராமகிருஷ்ணராஜுபேட்டை | | |

இம்மாவட்டத்தில் 3 வருவாய்க்கோட்டங்களும் அவற்றின் உட்பிரிவுகளும் கீழே குறிக்கப்ட்டுள்ளன.

## வருவாயிக் கோட்டங்கள் மற்றும் வட்டங்கள்

1. திருவள்ளூர் – இதில், திருவள்ளூர், ஊத்துக்கோட்டை, பூந்தமல்லி
2. பொன்னேரி – பொன்னேரி, கும்மிடிபூண்டி, அம்பத்தூர்
3. திருத்தணி – திருத்தணி, பள்ளிப்பட்டு

திருவள்ளூர் வருவாய்க்கோட்டத்தில், திருவள்ளூர் வட்டத்தில் 9 உள்வட்டங்களும், 188 கிராமங்களும், ஊத்துக்கோட்டையில் 5 உள்வட்டங்களும், 96 கிராமங்களும் பூந்தமல்லியில் 4 உள்வட்டங்களும், 53 கிராமங்களும் அடங்கியுள்ளன.

பொன்னேரி வருவாய்க்கோட்டத்தில் பொன்னேரியில் 8 உள்வட்டங்களும், 83 கிரமங்களும் அடங்கியுள்ளன.

திருத்தணி வருவாய்க்கோட்டத்தில் திருத்தணியில் 5 உள்வட்டங்களும், 76 கிராமங்களும் பள்ளிப்பட்டில் 5 உள்வட்டங்களும், 70 கிராமங்களும் உள்வட்டங்களும் உள்ளன.

## திருவள்ளூர் மாவட்டத்தின் பாராளுமன்றத் தொகுதிகள்

1. திருவள்ளூர்
2. அரக்கோணம்
3. வடசென்னை
4. ஸ்ரீபெரும்புத்தூர்

## சட்டமன்றத் தொகுதிகள்

1. கும்மிடிப்பூண்டி
2. பொன்னேரி
3. திருத்தணி
4. திருவள்ளூர்
5. பூந்தமல்லி
6. ஆவடி
7. மதுரவாயில்
8. அம்பத்தூர்
9. மாதவரம்
10. திருவொற்றியூர்

# 1. தொல்பழங்காலம்

பண்டைய நாளில் உலகில் மனிதன் வாழ்ந்திருந்தான் என்பதற்கான அடையாளமாகத் திகழ்பவை அவன் பயன்படுத்தி விட்டுச் சென்ற பொருட்களே ஆகும். குறிப்பாக பழங்கற்காலத்தில் அவர்கள் பயன்படுத்திவிட்டுச் சென்ற கல்லாயுதங்கள் மூலம் தொல்பழங்கற் காலத்தில் அவர்களது வாழ்க்கை முறையை அறியமுடிகிறது. இத்தகைய கற்கால மனிதர்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் வாழ்ந்திருந்தனர் என்பதற்கானத் தடயங்களான கருவிகள் அதிக அளவில் கிடைத்துள்ளன.

கற்கருவிகளின் வகை, செய்யப்பட்ட தொழிற்நுட்பம் ஆகியவற்றின் அடிப்படையில் பழையகற்காலம் (Palaeolithic period) உலகளவில் ஆய்வாளர்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இதனை மூன்று கால கட்டங்களாகவும் வகைப்படுத்தியுள்ளனர்.

1. முதற்கற்காலம் (Lower Palaeolithic Age)
2. இடைக்கற்காலம் (Middle Palaeolithic Age)
3. கடைக்கற்காலம் (Upper Palaeolithic Age)

என்பனவாகும்.

தென்னிந்தியாவில் திருவள்ளூர் மாவட்டத்தில்தான் பழைய கற்காலக் கருவிகள் கிடைக்கின்றன. இவை இம்மாவட்டத்தில் ஓடும் கொற்றலையாற்றுப் படுகைகளில் (இப்பகுதி மக்களால் குசஸ்தலை ஆறு என வழங்கப்படுகிறது) கற்கருவிகள் அதிக அளவில் கிடைக்கின்றன.

கொற்றலையாறு (பழைய பாலாறு) தற்போது வேலூர் மாவட்டம் வாலாஜப்பேட்டைக்கு அருகில் பாலாற்றிலிருந்து பிரிந்து செல்லும் சிறிய நீர்த்தடமாக உள்ளது. இது அரக்கோணம், திருத்தணி, திருவள்ளூர்.

பொன்னேரி வட்டங்கள் வழியாகப் பாய்ந்தோடி எண்ணூருக்கு அருகில் கடலில் கலக்கிறது. இது பழைய பாலாறு என்றும் விருத்தக்ஷீர நதி என்றும் அழைக்கப்படுகிறது. இந்த ஆற்றுப் பள்ளத்தாக்கில் தான் பழைய கற்காலக் கருவிகள் கிடைக்கின்றன. இவை செய்யப்பட்ட தொழிற் நுட்பத்தின் அடிப்படையில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட சென்னையின் பெயருடன் இணைத்து சென்னை மரபு (Madras Industry) என்று குறிப்பிடப்படுகின்றது.

இச்சென்னை மரபு கற்கருவிகளில் கைக்கோடாரிகள் (Hand Axe)திருவள்ளூர் மாவட்டத்தில் அதிக அளவில் கிடைக்கின்றன. தொல்லியல் அறிஞர்களால் இப்பண்பாடு (Hand Axe Culture) என்று அழைக்கப்படுகிறது. இக்கற்கருவிகள் யாவும் படிகக்கல்லிலிருந்து (Quartz) செய்யப்பட்டவைகள். இப்படிகக் கல்லிலிருந்து சில்லுகள் மிக எளிதாகப் பெயர்த்தெடுக்க இயலும். எனவே பழைய கற்கால மக்கள் இதனை கல்லாயுதங்கள் செய்யப் பயன்படுத்தியுள்ளனர். இவ்வகை கல் திருவள்ளூர் மாவட்டத்தில் திருவள்ளூர், ஊத்துக்கோட்டை, சத்தியவேடு ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன. இக்கால மக்கள் படிகக்கல் மனிதர்கள் (Quartzite men) என்றே அறிஞர்களால் அழைக்கப் படுகின்றனர். இவை திறந்தவெளிகள், ஆற்றுப்படுகைகள், மலைக் குகைகள் ஆகியவற்றில் காணப்படுகின்றன.

**ஆற்றுபடுகைகள் (River Terraces)**

கொற்றலை ஆறு செல்லும் வழித்தடங்களில் அல்லிக்குழி மலைக்குன்றுகளிலிருந்து காரனோடை அருகிலுள்ள எருமைவெட்டி பாளையம் வரை சில இடங்களில் ஆற்றுப்படுகைகள் காணப்படுகின்றன. இவை நில அமைப்பியலில் குறியீடப்படும் ஊழியான பிலைஸ்டோசீன் (Pleistocene) ஊழியைச் சேர்ந்ததாகும். இவற்றின் படிவ அடுக்குகளில் பழைய கற்காலக் கருவிகள் அதிக அளவில் கிடைக்கின்றன. இப்படிவ அடுக்குகள் 30 மீட்டர், 18 மீட்டர். 7 மீட்டர் மற்றும் 2 மீட்டர் உயரங்களுடன் உள்ளதாகத் தொல்லியல் ஆய்வாளர்களான வி. டி. கிருஷ்ணசாமி,

டி.டி. பேட்டர்சன் ஆகியோர் குறிப்பிடுகின்றனர். ஆனால் எச்.டி. சங்காலியா 18 மீட்டர், 7 மீட்டர் மற்றும் 2 மீட்டர் உயரமுடைய மூன்று படுகைகள் தான் கொற்றலையாற்றுப் பள்ளத்தாக்கில் உருவானதாக கருதுகின்றார்.

தற்போது தொல்பழங்காலத்திய ஆய்வில் ஈடுபட்டுள்ள முனைவர் சாந்தி பப்பு மேற் குறிப்பிட்டுள்ள ஆற்றுப்படுகைகள் பிளைஸ்டோசீன் (Pleistocene) முதல் ஹாலோசீன் (Holocene) வரையில் சிறிது சிறிதாக ஏற்பட்டவை எனக் குறிப்பிடுகின்றார்.

## இம்மாவட்டத்தில் கிடைக்கும் கைக்கோடரிகள்

கைக்கோடாரி வகைகளில் முதற்கட்டம் அபவில்லியன், அசூலியன் வகை கைக்கோடாரிகள் என்று வழங்கப்படுகின்றன. அபவில்லியன் அசூலியன் தொழில் நுட்பக்கருவிகள் (Abbevillio - Acheulian) முதல் நிலைக் கற்கருவி வகைகளாகும். இவை இயற்கையாகக் கிடைக்கும் பெரிய கற்களையோ அல்லது உருண்டையான கூழாங்கற்களையோ எடுத்து அவைகளிலிருந்து பெரிய சில்லுகளைப் பெயர்த்து எடுத்துவிட்டு இக்கருவிகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வகை கருவிகள் முதற் கற்காலத்தைச் சேர்ந்தவைகள் ஆகும். (Lower Palaeolithic Age) காலம்: (5,00,000 - 2,50,000 ஆண்டுகளுக்கு முன்) இக்காலக் கட்டத்தைச் சேர்ந்த கற்கருவிகள் திருவள்ளூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்களில் அதிக அளவில் கிடைக்கின்றன. எனவே இப்பகுதியில் இக்காலக் கட்டத்தினைச் சேர்ந்த மக்கள் பெருமளவில் வாழ்ந்துள்ளனர் எனத் தெரிகின்றது. அபவில்லியன் - ஆசூலியன் கல்லாயுதங்களில் கைக்கோடாரிகள், கிழிப்பான்கள், வட்டுகள் போன்றவை அதிக அளவில் செய்யப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன.

## இடைக்கற்காலம் (Middle Palaeolithic Age)

காலம்:(2,50,000 - 30,00,000 ஆண்டுகளுக்கு முன்)

இக்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகள் அளவில் சிறியனவாகவும், சில்லு கருவிகளாகவும் (Flake tools) உள்ளன. பெரும்பாலும்

கைக்கோடாரிகள் அதிக அளவில் கிடைக்காததால் இதன் பயன்பாடு பெருமளவில் குறைந்து விட்டது. சிறிய வடிவிலான கைக்கோடாரிகள் சில இடங்களில் மட்டும் கிடைக்கின்றன. இக்காலத்தில் முனை கற்கருவிகள் (Points) சுரண்டிகள் (Scrappers) கத்திகள் (Blades) போன்ற கருவிகளே திருவள்ளூர் மாவட்டத்தில் பெரிதும் கிடைக்கின்றன.

**கடைக்கற்காலம் (Upper Palaeolithic Age)**

காலம்:(30,000 - 10,000 ஆண்டுகளுக்கு முன்)

அண்மைக்காலத்தில்தான் கடைக்கற்காலம் தமிழகத்தில் இருந்ததற்கான சான்றுகள் திருவள்ளூரை அடுத்துள்ள அத்திரம் பாக்கத்தில் கிடைத்துள்ளன. இங்கு செந்நிற படிவடுக்குகளில் (Ferricreate or red soil)கருவிகள் செய்வதற்கேற்ற மூலக்கற்களும், சிறு கத்திகளும், சுரண்டிகளும் அதிகம் கிடைத்துள்ளன. அத்திரம்பாக்கத்தில் இக்கருவிகள் கிடைப்பதால் இங்கு இக்கற்கருவிகளைச் செய்யும் தொழிற்கூடம் இருந்திருக்கக்கூடும்.

திருவள்ளூரைச் சுற்றி தொல்பழங்காலப் பண்பாட்டைச் சேர்ந்த பல இடங்களில் அகழாய்வு செய்யப்பட்டுள்ளன. மத்தியத் தொல்லியல் துறையால் பூண்டி, நெய்வேலி, வடமதுரை, குடியம், அத்திரம்பாக்கம் ஆகிய இடங்களிலும், அத்திரம்பாக்கத்தில் சென்னையிலுள்ள சர்மா மரபியல் கல்விமையமும் (Sharma Center for Heritage Education) 1999-ஆம் ஆண்டும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை பரிக்குளத்திலும் அகழாய்வு செய்ததன் மூலம் தொல்பழங்காலத்தைக் குறித்த பல வினாக்களுக்கு விடையளிப்பனவாக உள்ளன.

**அத்திரம்பாக்கம்**

**அமைவிடம்**

சென்னையிலிருந்து 56 கி.மீ தொலைவில் அத்திரம்பாக்கம் அமைந்துள்ளது. இவ்வூரின் தெற்கில் கோர்த்தலையாறும், பூண்டி நீர்த்தேக்கமும், வடக்கில் அலிக்கூழி - சத்தியவேடு குன்றுகளும்

காடுகளும் உள்ளன. இப்பகுதி மக்கள் இவ்வூரினை அத்திரம்பாக்கம், ஆற்றம்பாக்கம், ஆட்ரம்பாக்கம் என பல்வேறு பெயர்களால் அழைக்கின்றனர். இவ்வூர் ஆற்றிற்கு பக்கத்தில் உள்ளதால் இப்பெயர் வழங்கப்பட்டதோ என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவ்வூருக்கு அருகில் செல்லும் கோர்த்தலையாறு 'விருத்தக்ஷீர நதி' என்றும் பழைய பாலாறு என்றும் வழங்கப்படுகின்றன.

இவ்வூரில் பாயும் 'பூதடி மன்னுவங்க' ஓடையை ஒட்டியுள்ள மேட்டில் பழைய கற்கால கருவிகளை கி.பி. 1863-இல் சர் இராபர்ட் புரூஸ்புட் கண்டறிந்தார். இம்மேட்டில் கூழாங்கல் படிவ அடுக்கில் கைக்கோடாரிகளுடன் மனித எலும்புப் பகுதியின் தொல்லுயிர் படிவத்தினையும் (Fossil)கண்டுபிடித்தார். சுமார் நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் கே. டி. பானர்ஜி (1963-64 மற்றும் 1978-79) இவ்வூரை அகழாய்வு செய்தார். இவ்வாய்வில் அசூலியன் மரபுக் கைக்கோடாரிகள்தான் அதிகம் கிடைத்தன.

சென்னையிலுள்ள சர்மா மரபியல் கல்வி மையம் (Sharma Center for Heritage Education) 1999 முதல் இங்கு மேற்பரப்பு மற்றும் அகழாய்வினை மேற்கொண்டது. இந்த ஆய்வில் அத்திரம்பாக்கத்தில் முதல் கற்காலம் (Lower Palaeolithic) 5,00,000 - 2,50,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனிதன் பயன்படுத்திவிட்டுச் சென்ற கற்கருவிகளும், இடைக்கற்காலம் (Middle Palaeolithic Age) 2,50,000 -30,00,000 ஆண்டுகளுக்கு முந்தைய கற்கருவிகளும், கடைக்கற்காலம் (Upper Palaeolithic Age) 30,000 - 10,000 ஆண்டுகளுக்கு முந்தைய கற்கருவிகளும் கிடைக்கின்றன. தொல் பழங்காலத்தில் கொற்றலையாற்றின் கரைப்பகுதியை ஒட்டியே இருந்துள்ளனர் என்பது இங்கு கிடைக்கும் அதிக அளவிலான கற்கருவிகள் மூலம் தெரிகின்றது. அசூலியன் வகைக் கைக்கோடரிகள் சுமார் 2,50,000 ஆண்டுகளுக்கு முற்பட்டத் தரைப்பகுதியில் கிடைக்கின்றன. சுமார் 10 லட்சம் ஆண்டுகளில் இப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள தட்பவெப்பநிலை மாறுதல்கள் அகழாய்வில் வெளிப்பட்டுள்ளன. பழைய

கற்காலத்தினைச் சேர்ந்த காட்டெருமையின் நீள் வட்ட வடிவ காலடித் தடயங்கள் 17 (Bovid hoof impressions) கற்கருவிகளுடன் மூன்று மீட்டர் ஆழத்தில் இந்தியாவிலேயே முதன்முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் வெப்பமண்டலச் சமவெளிப் பகுதியில் வாழும் நீர் எருமை, குதிரை மற்றும் கொம்புகற்றமான் ஆகியவற்றின் பற்கள் தொல்லுயிர் படிவங்களாகக் கிடைத்துள்ளன.

### பூண்டி

இங்கு 1965-66-ஆம் ஆண்டு அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இடை மற்றும் கடைக்காலத்திய கற்கருவிகளும், ஏழு வகை மண்ணடுக்குகளும் வெளிப்படுத்தப்பட்டன.

### நெய்வேலி

1962-63 மற்றும் 1963-64 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கைக்கோடாரிகளும், வெட்டுக் கருவிகளும், கூர்முனைக் கருவிகளும் கிடைத்துள்ளன.

### வடமதுரை

ஆரணி ஆற்றின் கிழக்குக் கரையில் அமைந்துள்ள இவ்வூரில் 100 அடி உயர படிவு படுகையில் (Terrace) 1966-67இல் அகழாய்வு செய்யப்பட்டது. இங்கு அபிவில்லியன் என்ற வகைக் கைக்கோடாரிகள் அதிகம் கிடைத்தன. இவற்றுடன் கிழிப்பான்களும் (Cleavers), சில்லுக்கருவிகளும் (Flake tools) கிடைத்துள்ளன.

### குடியம்

இவ்வூர் பூண்டிக்கு மேற்குப்புறம் 10 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள அல்லிக்குழி மலைத் தொடரில் பழைய கற்கால மக்கள் வாழ்ந்த 16 குகைகள் காணப்படுகின்றன. இவற்றுள் மிகப்பெரிய அளவிலான குகை 'மனச்சம்மன்' குகை எனப்படும். இது சுமார் 100 அடி உயரமுடையதாகும். இதில் சுமார் 100 பேர் தங்கக்கூடிய அளவு

மிகப்பெரியது. இப்போதும் இப்பகுதி கிராம மக்கள் பௌர்ணமி நாளில் இங்குள்ள மனச்சம்மனை வழிப்பட்டுச் செல்கின்றனர்

இங்கு 1962-63 மற்றும் 1963-64 இல் அகழாய்வு செய்யப்பட்டது. இதில் தொல்பழங்காலத்தில் கற்கருவிகள் செய்யும் தொழில்நுட்பத்தில் படிப்படியாக வளர்ச்சி பெற்றதைத் தெளிவாக அறியமுடிகிறது. கைக்கோடாரிகள், கிழிப்பான்கள், வெட்டிகள், சுரண்டிகள் ஆகியவை கிடைத்துள்ளன.

## பரிகுளம்

பூண்டிக்கு தென்மேற்கே சுமார் 10 கி.மீ. தூரத்தில் உள்ளது. இவ்வூரில் கிருஷ்ணா நதி நீர் திட்டத்தின் கீழ் கால்வாய் வெட்டும்போது செம்மண் சரளைக் கல்மேட்டில் (Laterite gravel deposit) பழையகற்காலக் கல்மேடு காணப்பட்டன. இவை சுமார் ஐந்து லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பிளைஸ்டோசின் காலத்தில் தோன்றிய மேடாகும். இந்த படிவுப்படுகை (Deposital terrace)இல் நான்கு படிவடுக்குகள் காணப்படுகின்றன. மேல் அடுக்கில் சிதைந்த சரளைக்கல் அடுக்கும் (Detrial Laterite deposit) அதன் கீழ் சிறு கூழாங்கற்களுடன் கூடிய சரளைக்கல் அடுக்கும் (Laterite mixed with Pebbles) உள்ளன. இவ்வடுக்கில் தான் பழைய கற்காலக் கருவிகள் சுமார் மூன்று லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டவைகளாகும். ஏனெனில் இவை கிடைக்கும் இப்படிவ அடுக்கு சுமார் ஐந்து லட்சம் ஆண்டுகளுக்கு முந்தைய பிளைஸ்டோசின் காலத்தில் ஏற்பட்டதாக புவியியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அதற்கடியில் பெருங்கற்களுடன் கூடிய சரளைக்கல் அடுக்கும் (Laterite mixed with boulders) அதன் கீழ் கெட்டியான களிமண்ணும் (Sriperumbudur or Avadi shale) காணப்படுகின்றன.

பரிகுளத்தில் கிடைத்த கற்கருவிகள் நீண்ட காலமாக செந்நிற சரளைக்கல் அடுக்கில் கலந்திருந்ததால் இவற்றின் மேற்புறம் செந்நிறமாக (Patination) காணப்படுகிறது. அகழாய்வில் எழுபதிற்கும் மேற்பட்ட

கற்கருவிகள் கிடைத்துள்ளன. இவற்றில் சில அபவில்லியோ – அசூலியன் பண்பாட்டைச் சேர்ந்தவைகளாகவும் (அதாவது காலத்தால் முற்பட்டவைகள்) பிற அசூலியன் பண்பாட்டைச் சேர்ந்தவைகளாகவும் காணப்படுகின்றன. கைக்கோடாரிகள், வெட்டுக்கத்திகள், சுரண்டிகள், கூர்முனைக்கருவிகள், வட்டுகள் ஆகியவை குறிப்பிடத்தக்க கருவிகளின் வகைகளாகும்.

திருவள்ளூர் மாவட்டம் உலகில் பல நாடுகளைச் சேர்ந்த தொல் பழங்கால ஆய்வாளர்களுக்கு ஒரு புனிதத்தலமாக திகழ்கின்றது என்றால் அது மிகையல்ல. இம்மாவட்டத்தில் ஓடும் கொற்றலையாறு, ஆரணி ஆற்றுப் பகுதிகளில் பழைய கற்கால மக்கள் விலங்குகளை வேட்டையாடியும் வாழ்க்கை நடத்தியுள்ளனர். கற்களைக் கொண்டு கற்கருவிகளை செய்துள்ளனர். நெருப்பின் பயனை இவர்கள் அறியவில்லை. மரப்பட்டைகளையும், விலங்குகளின் தோலையும் ஆடையாக உடுத்தியுள்ளனர். மலைக்குகைகளிலும் ஆற்றோரங் களிலும் வாழ்ந்துள்ளனர் என இவர்கள் பயன்படுத்திவிட்டுச் சென்ற கற்கருவிகள் மூலம் அறியமுடிகின்றது.

## திருவள்ளூர் மாவட்டத்தில் பழைய கற்காலக் கருவிகள் கிடைக்குமிடங்கள்

| வ.எண் | ஊர் | வ.எண் | ஊர் |
|---|---|---|---|
| 1. | அஞ்நூர் | 24. | கிரிணயேத்தம் |
| 2. | அத்திரம்பாக்கம் | 25. | கிருஷ்ணாபுரம் |
| 3. | அம்மணம்பாக்கம் | 26. | குஞ்ஞரபாளையம் |
| 4. | அமரம்பேடு | 27. | குடியம் |
| 5. | அரும்பாக்கம் | 28. | கூனிபாளையம் |
| 6. | அல்லிக்குழி | 29. | கொல்லபாளையம் |
| 7. | இலவம் கண்டிகை | 30. | சீத்தஞ்சேரி |
| 8. | ரங்காபுரம் | 31. | செங்குன்றம் |
| 9. | ஊத்துக்கோட்டை | 32. | சென்றாயன்பாளையம் மதிரிமேடு |
| 10. | எடமச்சி | | |
| 11. | எருமைவெட்டிபாளையம் | 33. | தரணிவராகபுரம் |
| 12. | ஏரிகுப்பம் | 34. | திம்மபூபாலபுரம் |
| 13. | ஒதப்பை | 35. | திருமுல்லைவாயில் |
| 14. | ஒரகடம் | 36. | தேவேந்திபாக்கம் |
| 16. | கச்சூர் | 37. | தோமூர் |
| 17. | கட்டுப்புடி | 38. | நக்கலகோணா |
| 18. | கம்மவாரிபாளையம் | 39. | நயப்பாக்கம் |
| 19. | கல்மேடு | 40. | நம்பாக்கம் |
| 20. | கல்வாய் | 41. | நாய்க்கன் பாளையம் |
| 21. | கலவை | 42. | நாராயணபுரம் |
| 22. | கரடிப்புத்தூர் | 43. | நெய்வேலி |
| 23. | கருக்கம்பாக்கம் | 44. | நெல்வாய் |

45. பரிக்குளம்
46. பாதிரிவேடு
47. பிளேஸ்பாளையம்
48. புத்தூர்
49. புதூர்
50. பூண்டி
51. பொன்னாலூர்பேட்டை
52. போந்தவாக்கம்
53. மஞ்சாங்கரணை
54. மண்ணூர்
55. மதிரிமேடு
56. மயிலாப்பூர்
57. மாகாளியம்
58. மாதர்பாக்கம்
59. மாவண்டூர்
60. மாளத்தூர்
61. மேட்டுப்பாளையம்
62. இராஜபாளையம்
63. ரோஷாநகரம்
64. வடமதுரை
65. விடையூர்
66. வெங்கல்
67. வெள்ளத்துக்கோட்டை
68. வேலியூர்
69. வேளகாபுரம்

## திருவள்ளூர் மாவட்ட தொல்லியல் அகழாய்வுகள்

| ஊர் | ஆண்டு | இடத்தன்மை |
|---|---|---|
| 1. குடியம் | 1962-63 | |
| | 1963-64 | பழைய கற்காலம் |
| 2. அத்திரம்பாக்கம் | 1964-65 | பழைய கற்காலம் |
| 3. நெய்வேலி | 1963-64 | பழைய கற்காலம் |
| 4. பூண்டி | 1965-66 | பழைய கற்காலம் |
| 5. வடமதுரை | 1966-67 | பழைய கற்காலம் |
| 6. அமிர்தமங்கலம் | 1944-49 | இரும்பு காலம் |
| **தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை** | | |
| 1. பரிகுளம் | 2005-06 | பழைய கற்காலம் |
| **சென்னைப் பல்கலைக்கழகம்** | | |
| 1. திருவேற்காடு | 1996-2000 | வரலாற்றுக் காலம் |
| **பிற ஆய்வு மையங்கள்** | | |
| **சர்மா சென்டர் பார் ஹெரிடேஜ் எஜுகேஷன்** | | |
| 1. அத்திரம்பாக்கம் | 1998-99 | பழைய கற்காலம் |

# 2. பெருங்கற்காலம்

**கல்திட்டை** (Dolmonoid cist)

இவை தரைமட்டத்திற்கு மேல் அமைக்கப்பட்டன. இயற்கையாகக் கிடைக்கும் பெரிய கருங்கற்களைக் கெண்டு நான்கு புறங்களிலும் சுவர்போல் அமைத்து ஒரு சதுரமான அல்லது நீண்ட சதுரமான அறை உண்டாக்கப்பட்டது. இக்குழிவறையின் அடிப்பகுதியைக் கற்களைக் கொண்டு தரை மேல் அமைத்து அதன் மேல் ஈமப் பொருட்கள் வைக்கப்பட்டன. பிறகு மேலே ஒரு பட்டைக் கல்லைக் கொண்டோ அல்லது இரண்டு மூன்று பட்டைக் கற்களைக் கொண்டோ அறை மூடப்பட்டது. கல்லறைச் சுவர்களுக்கு ஆதரவாகச் சுற்றிலும் சிறு சுவர்கள் எழுப்பப்பட்டன. மண், சிறு கற்கள் அல்லது கூழாங்கற்கள் ஆகியவற்றைக் கொண்டு அறை மூடி மறைக்கப்பட்டது. இதனால் ஒரு திட்டு அல்லது குவை தரை மட்டத்திலிருந்து எழும்பியது. குவை சிதையாமல் இருக்க சுற்றிலும் பெரிய உருண்டைக் கற்கள் வட்டமாக வைக்கப்பட்டன. இவ்வகை ஈமச்சின்னங்கள் சானூர், செங்குன்றம், திருவேலங்காடு, பெரும்பேர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

**கல்பதுக்கை** (Slabbed cist)

பூமியைச் சிறிது தோண்டி அதன் நாற்புறமும் நான்கு பலகைக் கற்களை நிறுத்தி ஒரு அறை உருவாக்கப்பட்டது. இப்பலகைக் கற்கள் சாயாமல் இருக்க ஒரு கல் இன்னொரு கல்லைத் தாங்கும் வகையில் ஒவ்வொரு கல்லின் முனையும் ஒரு பக்கம் நீட்டி நிறுத்தப்பட்டது. இந்த அமைப்பு மேலேயிருந்து பார்ப்பதற்கு ஸ்வஸ்திகா போன்று தோற்றமளிக்கும். இவ்வறையில் ஈமப் பொருள்கள் இட்ட பிறகு மேலே ஒரு பெரிய பலகைக் கல்லாலான மூடி கவிக்கப்பட்டது. இதன் மேல் மண் அல்லது கூழாங்கற்கள் கொண்டு ஒரு மேடு எ ழுப்பப்பட்டது. சில

இடங்களில் இம்மேட்டைச் சுற்றிலும் கல்வட்டங்கள் காணப்படுகின்றன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமிர்தமங்கலம் என்னும் ஊரில் இவ்வகைச் சின்னங்கள் கல்வட்டங்களின்றிக் காணப்படுகின்றன.

**கற்கிடை** (cairn circle)

ஆழமான குழியைத் தோண்டி அதனுள் ஈமத்தாழி அல்லது ஈமப்பேழை ஆகியவற்றோடு ஈமப்பொருட்களை வைத்து அதன் மீது மண் அல்லது கற்களைக் குவித்து வைப்பார்கள். இந்த ஈமக் குழியைச் சுற்றிலும் உருண்டையான கற்களை வட்டமாக வைத்து அமைக்கப்படும் ஈமச் சின்னத்தையே கற்கிடை அல்லது கல்வட்டம் என்று அழைப்பர். இவை குன்னத்தூர், குன்னவாக்கம், சானூர், பல்லாவரம், பெரும்பேர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

**ஈமத்தாழி** (Urn)

இவை சுடுமண்ணால் செய்யப் பெற்று நீண்ட பெட்டியைப் போன்ற தோற்றம் கொண்டவை. இப்பேழைகள் இரண்டு பகுதிகளாக இருக்கும். கீழ்ப்பகுதி பல கால்களுடன் காணப்படும். மூடியாக விளங்கும் மேல் பகுதி ஆடு போன்ற விலங்குகளின் உருவங்களைக் கொண்டிருக்கும். ஆழமான குழியினுள் ஈமப்பேழையுடன் ஈமப்பொருட்களும் வைத்துப் புதைக்கப்பட்டன. இவை குன்னத்தூர். பெரும்பேர். சானூர், சிறுவானூர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

**அகழாய்வு செய்யப் பெற்ற பெருங்கற்சின்ன இடங்கள்**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அகழாய்வு செய்யப்பெற்ற பெருங்கற் சின்ன இடங்களை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். தென் பகுதியில் காணப்படும் பெருங்கற் சின்னங்கள் இயற்கையாகக் கிடைக்கும் பெரிய கருங்கற்பாறைகளைக் கொண்டு அமைக்கப்பட்டவை. வட பகுதியில் காணப்படும் பெருங்கற்சின்னங்கள் செதுக்குவதற்று ஏற்ற தன்மை யுடைய “லேட்டரைட்” கற்களைக் கொண்டு எழுப்பப்பட்டவை.

## அமிர்தமங்கலம்

இவ்வூர் கும்மிடிப்பூண்டி வட்டத்தில் கவரைப்பேட்டைக்கு மேற்கே சுமார் 10 கி.மீ. தூரத்தில் உள்ளது. எல்லா இடங்களைப் போலவே இங்கும் பெருங்கற் சின்னங்கள் காணப்படும் இடத்திற்கு அருகில் ஏரி ஒன்றும், நீரோடைகளும் காணப்படுகின்றன. இவ்விடத்திற்கும், மற்ற பெருங்கற்சின்ன இடங்களுக்கும் ஒரு முக்கிய வேறுபாடு உள்ளது. அதாவது இங்கு காணப்படும் ஈமச்சின்னங்களில் மற்ற இடங்களைப் போன்று கல்வட்டங்கள் காணப்படவில்லை. ஏறக்குறை 250 ஈமச் சின்னங்கள் இங்கு காணப்படுகின்றன.

இங்கு 1954-55 ஆண்டுகளில் திரு. என்.ஆர் பானர்ஜி அவர்கள் மேற்பார்வையில் மத்தியத் தொல்லியல் ஆய்வுத் துறையினர் ஐந்து ஈமச் சின்னங்களில் அகழ்வாராய்ச்சி நடத்தி, குவிந்த அடியும், உருண்டை யான நடுப்பகுதியும், அகன்ற வாயும் கொண்டு வெளிர் சிவப்பு நிறத்தில் காணப்படும் ஈமத்தாழிகளில் மண்டையோடுகள், நீண்ட எலும்புகள், கருப்பு சிவப்பு வண்ண மட்கலங்கள், இரும்புப் பொருட்கள் போன்றவை காணப்படுகின்றன. சில ஈமத்தாழிகளின் மேற்புறம் வட்டவடிவமான மூடிகள் (Dome shapped lid) கொண்டு மூடப்பட்டுள்ளன.

## வாழக்கை நிலை

இக்கால மக்கள் நல்ல நாகரிக வாழ்க்கையை மேற்கொண்டனர் என்பதற்குப் பெருங்கற்சின்னங்களிலிருந்து கிடைக்கும் பொருட்கள் சான்று பகர்கின்றன.

## வாழ்விடங்கள்

பெருங்கற்கால மக்கள் தங்கள் வாழ்வின் பல்வேறு வசதிகளுக்காகப் பல தொழில்களைக் கற்று, அவற்றைத் திறம்படச் செய்துள்ளனர். அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட ஈமச்சின்னங்களில் மட்கலங்கள், இரும்பாலான பொருட்கள் போன்றவைதான் அதிக அளவில் கிடைக்கின்றன. இதிலிருந்து மட்கலத் தொழிலும், இரும்புப் பொருட்கள் செய்யும் தொழிலும்தான் இக்கால மக்களின் முக்கியத் தொழில்களாக இருந்திருக்கின்றன என்று தெரிகிறது.

## மட்கலத் தொழில்

இம்மக்கள் மட்கலன்களை அதிக அளவில் பயன்படுத்தியிருக் கின்றனர். இவர்கள் பயன்படுத்திய மட்கலன்கள் வீட்டு பயன்பாட்டிற்கு ஏற்றவையாக இருந்தன. சாடிகள் போன்ற மட்கலங்களைத் தானியங்கள் சேமித்து வைக்கவும், இறந்தவர்களைப் புதைக்கவும் பயன்படுத்தினர். மட்கலன்கள் செய்யும் தொழிலை இவர்கள் முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தனர். இக்காலத்தில் இத்தொழில் மிக வளர்ச்சியுற்றிருந்து இக்காலத்திய மட்கலங்கள் நான்கு வகையானவை. அவை கறுப்பு சிவப்பு வண்ண மட்கலங்கள் (Black and Red ware) கறுப்பு மட்கலங்கள் (Black ware) சிவப்பு மட்கலம் (Red ware) , செம்பழுப்புப் பூச்சு மட்கலங்கள் (Russet-Coated ware) எனப்படும். கறுப்பு சிவப்பு வண்ணமட்கலங்கள் உணவு சமைக்கப்பயன்பட்டன. சிவப்பு வண்ண மட்கலங்கள் பெரிய அளவிலானவை. இவை பெரும்பாலும் ஈமத்தாழிகளாகவும் தானியங்கள் அல்லது தண்ணீர் சேமித்து வைக்கவும் பயன்படுத்தப் பட்டன. இம்மட்கலங்களின் கழுத்துப் பகுதியில் குச்சிகளைக் கொண்டு புள்ளிகள் குத்திச் செய்யப்பட்ட சித்திர வேலைப்பாடுகள் மற்றும் கயிறு கொண்டு செய்யப்பட்ட வேலைப்பாடுகள் காணப்படுகின்றன.

## கருமான் தொழில்

பெருங்கற்சின்னங்களில், மட்கலங்களுக்கு அடுத்தபடியாகப் பல இரும்புப் பொருட்கள் கிடைக்கின்றன. இதிலிருந்து இம்மக்கள் இரும்புத் தாதுக்களைச் சேகரித்து அவைகளை உருக்கி, வார்த்து அதன் மூலம் தம் வாழ்க்கைக்கு தேவையான கருவிகளைச் செய்து வாழ்ந்தனர் எனத் தெரிகிறது. இக்கருவிகள் பெரும்பாலும் போர் அல்லது வேட்டையாடு வதற்குப் பயன்படக்கூடிய வாள், குத்துவாள், வேல்கள், முள்கொண்ட அம்புமுனைகள், ஈட்டிகள் போன்றவைகளாகும். மேலும் ஏராளமான வேளாண்மைக் கருவிகளும் இரும்பினால் செய்யப்பட்டன. இவற்றுள் மண்வெட்டிகள், கொத்துகள், கோடாரிகள், அரிவாள்கள், கடப்பாறைகள் போன்றவை குறிப்பிடத்தக்கவைகளாகும். குதிரைக் கடிவாளங்களும் கிடைத்துள்ளன. இக்கால மக்கள் தங்களுடைய எல்லாத்

தொழில்களுக்கும் இரும்பைப் பயன்படுத்தினார்கள் எனத் தெரிகிறது. இவர்களின் இம்முன்னேற்றத்திற்குக் காரணமே இரும்புத் தொழில்தான் எனலாம்.

## வேளாண்மைத் தொழில்

வேளாண்மைத் தொழில் நாகரிக வளர்ச்சிக்கு மிகவும் அடிப்படையான தொழிலாகும். புதிய கற்காலத்தில் துவக்க நிலையில் இருந்த வேளாண்மை பெருங்கற்காலத்தில் நன்றாக வேரூன்றிப் பரவியது. செங்கற்பட்டு மாவட்டத்தில் இச்சின்னங்கள் உள்ள எல்லா இடங்களுக்கு அருகிலும் ஏரிகள் அல்லது நீர்த்தேக்கங்கள் காணப்படு கின்றன. இவற்றை முதலில் உருவாக்கியவர்கள் பெருங்கற்கால மக்கள்தான். இம்மக்கள் நீரைத் தேக்கிவைத்து அவற்றை வேளாண்மைத் தொழிலுக்குப் பெரிதும் பயன்படுத்தினர். இத்தொழிலுக்கு இன்றியமையாத மண்வெட்டிகள், கொத்துகள், பட்டையான கோடாரிகள், கடப்பாறைகள், அரிவாள்கள் போன்ற கருவிகள் இரும்பினால் செய்யப்பட்டன. குன்னத்தூரில் அகழ்வு செய்யப் பெற்ற ஒரு ஈமச்சின்னத்தில் உமி நிரம்பிய செப்புக் கிண்ணம் கிடைத்துள்ளது. இதிலிருந்து இம்மக்கள் வேளாண்மை மூலம் கிடைக்கும் தானியங்களைச் சேமித்து வைக்கும் பழக்கத்தினை மேற் கொண்டிருந்தனர் எனத் தெரிகிறது. பருத்தியும் முக்கியமானப் பயிராக இக்காலத்தில் இருந்துள்ளது.

## வேட்டையாடுதல்

வேளாண்மைத் தொழிலோடு இவர்கள் வேட்டையாடும் தொழிலையும் மேற்கொண்டிருந்தனர். போர் செய்யப் பயன்பட்ட கருவிகள் வேட்டையாடுவதற்கும் பயன்பட்டன. ஓநாயின் எலும்புகள் சில ஈமச்சின்னங்களில் காணப்படுகின்றன. இரும்பாலான தூண்டில்கள் கிடைப்பதைக் கொண்டு இவர்கள் மீன் பிடிக்கும் தொழிலினையும் மேற்கொண்டிருந்தனர் என அறியலாம். மாடுகள், எருமைகள், ஆடுகள் போன்றவை வீட்டு விலங்குகளாக இருந்துள்ளன. குதிரையும் வளர்த்துள்ளனர்.

## போர்த்தொழில்

இரும்பினால் செய்யப் பெற்ற பல போர்க்கருவிகள் கிடைப்பதைக் கொண்டு, பெருங்கற்கால மக்கள் மிகுதியாகப் போர்த்தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என அறியலாம். போரில் இவர்கள் குதிரைகளைப் பயன்படுத்தியிருக்கக் கூடும், ஏனெனில் குதிரை கடிவளம் போன்றவை ஈமச்சின்னங்களிலிருந்து கிடைத்துள்ளன.

## சமூக வாழ்க்கை

பெருங்கற்கால மக்கள் ஊர்களில் கூட்டமாக வாழ்ந்தனர். கூரை வீடுகளேயன்றி செங்கற்களாலான கட்டிடங்களைக் கட்டி வாழும் நாகரிக வாழ்க்கையையும் மேற்கொண்டிருந்தனர். வேளாண்மை முக்கிய தொழிலாக இருந்திருக்கிறது. ஏரிகள், நீர்த்தேக்கங்கள் போன்றவற்றைத் தோண்டுவதற்கு நிறைய மனித உழைப்புத் தேவை. பெருங்கற்காலக் கூட்டுச் சமுதாய வாழ்க்கை இத்தகைய உழைப்புக்கு அடிகோலியது. இம்மக்கள் சமூகத்தின் பல்வேறு தேவைகளுக்கு வேண்டிய பொருட்களை உருவாக்கிக் கொடுக்கும் தொழில்முறைகளை அறிந்திருந்தனர். ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் மற்றொரு கூட்டத்தின்மீது அடிக்கடி போர் தொடுத்தனர். எனவே. போர் இவர்கள் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகித்தது. பருத்தியினால் நெய்யப் பெற்ற ஆடைகளை உடுத்தினர். பலவகை விலையுயர்ந்த கற்களால் செய்யப் பெற்ற மணிகளாலான அணிகளை அணிந்தனர், சங்கு வளையல்களைப் பூண்டனர்.

## சமயம்

இறப்பிற்குப்பின் உள்ள வாழ்க்கையில் பெருங்கற்கால மக்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார்கள். இவர்கள் எழுப்பிய ஈமச் சின்னங்கள் இதைப் புலப்படுத்துகின்றன. ஈமச்சின்னங்களின் கிழக்குப் புறத்தில் காணப்படும் துளை (porthole) ஞாயிறு வழிபாட்டைக் குறிக்கலாம். மேலும் சிவ வழிபாடு, முருக வழிபாடு இருந்துள்ளன.

**ஈமச்சடங்கு**

இறந்தோரைத் தீயிலிடும் பழக்கம் இவர்களிடையே இல்லையெனத் தெரிகிறது. பெரும்பாலும், இவர்கள் இறந்தவர்களின் சடலத்தைத் திறந்தவெளியில் கிடத்திவிட்டு அதனுடைய சதைப்பற்று விலங்குகளாலும், பறவைகளாலும், இயற்கையாலும் அழிக்கப்பட்ட பிறகு எஞ்சியுள்ள எலும்புக் கூட்டை மட்டும் எடுத்துப் பெருங்கற் சின்னங்களில் புதைத்தனர். இது போன்ற பழக்ககத்தை பார்ஸி இனத்தவர் இன்றும் கடைப்பிடிப்பது குறிக்கத்தக்கது.

**காலம்**

இப்பெருங்கற்காலப் பண்பாடு கி.மு. 1000-ல் தொடங்கி கி.பி. 200 வரை நிலவியது என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

# 3. சங்ககாலம்

திருவள்ளூர் மாவட்டம், சங்க காலத்தில் தொண்டை நாட்டின் ஒரு பகுதியாக இருந்துள்ளது. பின்னர் ஆங்கிலேயர் காலத்தில் செங்கல்பட்டு மாவட்டத்தில் இருந்தது. தற்போது. திருவள்ளூரை தலைநகராகக் கொண்டு தனி மாவட்டமாகத் திகழ்கின்றது.

கரிகால்சோழன் தொண்டை மண்டலத்தினை 24 கோட்டங்களாகவும். 79 நாடுகளாகவும் பிரித்தான் என தொண்டை மண்டலச்சகதம் குறிக்கின்றது.

"காவியமாகிய காமீகங் கண்டுங்காங் காலகுலத்தோர்
ஓவிய சூத்திரராக இருப்பது ந ான்குயர்ந்த
மேவிய கோட்டத்திலுங்கரி கால்வள வன்மிக்க
வாவிய மேன்மை கொடுத்தான் தொண்டை மண்டலமே"

தொண்டை மண்டல சகதம்-97

மற்றொரு பழம் பாடலில் தொண்டைநாடு 79 நாட்டுப் பிரிவுகளையும். 1900 பழைய ஊர்களையும் உள்ளடக்கி இருந்ததாகக் குறிப்பு காணப்படுகின்றது.

"கோட்மோ நிருபா னான்காம்
கூறுநாடெழுபத் தொன்பான்
றோட்டொழில் ஆயிரத்துத்
தொள்ளாயிர நத்த மாகம்"

[தொண்டை மண்டல சகதம். மேற்கோள்-பக்.332]

தொண்டை மண்டல கோட்டம். நாடுகள் நாட்டுப் பிரிவுகள் பிற்சேர்க்கையாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

பிற்காலத்தில் அதாவது விஜயநகர அரசர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த போது படைவிட்டு ராஜ்யம்-36. சந்திரகிரி ராஜ்யம்-37. பிரித்வி ராஜ்யம்-38 என்று வழங்கப்பட்டன. மேலும் திருக்கழுக்குன்றப்பற்று-39. அத்திப்பற்று-4. களத்தூர்ப்பற்று. அனாதர்பற்று-41. ஆயிரம்வேலிப்பற்று-42 என்றும் பாகப்பற்று மேல்கூறு 43 என்றும் பெரும்பாணப்பாடி கரைவழி மேற்கூறு 44 என்றும் பெரும்பாக்கச் சீமை என்றும் கூட பிற்காலத்தில் இருந்தன.

எனவே தொண்டைமண்டலத்தில் அக்காலத்தில் இருந்துள்ள நாட்டுப் பிரிவுகளும். ஊர் பெயர்களும் தற்போதும் வழங்கி வருகின்றது.

# 4. திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர்கள்

## கூவம்

சென்னை மாநகருக்கு ஒரு காலத்தில் குடிநீர் வழங்கிய ஆறு கூவம். இந்த ஆறு சென்னையிலிருந்து சுமார் 34 கி.மீ. தொலைவில் உள்ள கூவம் என்ற கிராமத்திலிருந்து புறப்பட்டு திருவள்ளூர் வழியாக அரும்பாக்கத்தில் நுழைந்தவுடன் சென்னை மக்களின் வசைமொழிக்கு ஆளாகி சாக்கடை கலந்த ஆறாக மாறுகிறது. கூவம் என்ற கிராமத்தில்தான், "இறைவன் ஐயன்நல் அதிசயனாக" வீற்றிருக்கிறான்.

சிவபெருமான் திருவிற்கோல நாதராக திரிபுர அசுரர்களின் ஏர்காலை (தேர் அச்சை) ஒடித்தார். இறைவனின் இச்செயலே ஊருக்கும் பெயராக வழங்கப்பட்டது. திருஞானசம்பந்தர், இவ்வூரினை, 'கொந்துலா மலர்ப்பொழிற்கூகம் மேவினான்' எனவும், சிவப்பரகாசர், 'குன்றவிற் கோலத்தெம்மான் கூவரம் கருதியுள்ளம்' எனவும் சிறப்பித்துப் பாடியுள்ளனர். இலக்கியங்கள் குறிப்பிடும் கூகம் என்பதே பின்னர் கூவமாயிற்று.

இறைவன் திருவிற்கோலநாதர் எனவும், திரிபுராந்தகர் எனவும், இறைவி திரிபுராந்தக நாயகி என்றும் வழங்கப்படுகின்றனர். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இறைவி பையரவல்குலம்மை என அழைக்கப்படுகிறாள். இதே பெயர் கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் சுமார் 10 நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் வழங்கப்பட்டுள்ளது.

கூவத்து இறைவனை ஞானசம்பந்தர்,

"உருவின் ஆர் உமையொடு மொன்றி நின்றதோர்
திருவினான் வளர்சடைத் திங்கள் கங்கையான்

வெகுவினாவர் தொழ வெகுண்டு நோக்கிய
செருவினானுறை விடந் திருவிற் கோலமே"

எனப் பாடி பரவுகின்றார்.

சிவபெருமான் திரிபுரத்தை அழித்த செயலை
"நெடுநகர்ப்புரங்கள் மூன்றையும் சிதைத்தவன்"
"................... ஒரு சரத்தினால் வெற்றிகொள்
அவுணர்கள் புரங்கள் வெந்தற"
"................... புறங்கள் வெந்தறச்
செகுத்தவன் உறைவிடங் திருவிற்கோலமே"

எனப் போற்றியுள்ளார்.

மேலும் இவ்வூரில் சமணமும், புத்த சமயத்தினரும் வாழ்ந்திருந்தனர் என்பதை இவரின்

"சீர்மையில் சமனெடு சீவ ரக்கையரர்
நீர்மையில் உரைகள் கொள்ளாத நேசர்க்குப்
பார்மலி பெருஞ்செல்வம் பரிந்து நல்கிடும்
சீர்மையினானிடந் திருவிற் கோலமே"

என்ற பாட்டின் மூலம் அறிய இயலுகிறது. இக்கூற்றினை மெய்ப்பிக்கும் வகையில் பல புத்த சிலைகளும் கிடைத்துள்ளன. இவற்றை ஒப்பு நோக்கும் போது சம்பந்தர், சமண, புத்த சமயங்களின் தாக்கத்தினைக் குறைக்க, இவ்வூர் இறைவன் முப்புர அசுரர்களை அழித்த செயலை போற்றிப் பாடியிருத்தல் கூடும்.

திருக்கூவப் புராணம். இரட்டைப் புலவர்கள் பாடிய பதிகங்களும் இவ்வூர் இறைவன் மீது பாடப்பட்ட பிற இலக்கியங்கள்.

## கல்வெட்டுகள்

அமைதியான அழகிய இடத்தில் அமைந்த ஊர் கூவத்தின் மையத்தில் கோயில் அமைந்துள்ளது. கருவறை, அர்த்தமண்டபத்துடன்

கிழக்கு நோக்கியுள்ளது. கருவறையின் அடித்தளம் சதுரமாகவும், மேல்தளம் கஜபிரஷ்ட (தூங்கனை மாடம்)அமைப்பிலும் உள்ளது. அதிட்டானத்தில் பல சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இக்கோயில் மூன்று தள அமைப்பில் உள்ளது. இது திருத்தணி, திருவெற்றியூர் கோயில்களின் அமைப்பை ஒத்துள்ளது. தேவ கோட்டத்தல் தென்புறம் கணபதி, தட்சிணாமூர்த்தியும், வடபுறம் பிரம்மா, துர்க்கையும், மேற்குப்புறம் லிங்கோத்பவர் சிற்பங்களும் காணப்படுகின்றன. மகாமண்டபம் மற்றும் பிற சன்னதிகளும் பிற்காலத்தவை. சிற்பங்களின் உருவமைதியையும், கட்டட அமைப்பினையும் நோக்கும்போது (ஞானசம்பந்தர் காலத்தில் செங்கற் கட்டடமாக இருந்தது) இக்கோயில் முதலாம் இராஜேந்திரன் காலத்தில் கற்றளியாக மற்றப்பட்ட கோயிலாகும். இதனை இங்கு காணப்படும் கல்வெட்டுகளின் மூலமும் அறிதியிட்டுக் கூறலாம்.

இவ்வூரில் 32 கல்வெட்டுகள் உள்ளன. பழைய கல்வெட்டுகள் கருவறையின் வடக்கு, மேற்குச் சுவரில் காணப்படுகின்றன. இரண்டாம் இராஜேந்திரனின் 5 ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1057) ஜயங்கொண்ட சோழ மண்டலத்தில், சோழ வித்யாதரச் சதுர்வேதிமங்கலம் எனப்படும் கோட்டூர் சபையின் நிலம் ஒன்றினை 160 காசுக்கு விற்றனர். இதன் வழியாகத்தான் திரிபுவனமாதேவி பேரேரியிலிருந்து நீர் செல்ல கால்வாய் வெட்டப்பட்டது. இவ்வேரி மதுராந்தகநல்லூர் எனப்படும் கூவத்தில் இருந்ததாகத் தெரிகிறது. ஆகையால் முதலாம் இராஜேந்திரனின் பெயரான மதுராந்தகனை இவ்வூருக்கும், அவன் மனைவியருள் ஒருத்தியான திரிபுவனமாதேவி பெயரை ஏரிக்கும் வைத்தள்ளனர் எனத் தெரிகிறது. இதிலிருந்தும் இக்கோயில் முதலாம் இராஜேந்திரன் காலத்தில் கட்டப்பட்டது என உறுதியாகக் கூறலாம்.

வீரஇராஜேந்திரனின் கல்வெட்டில் (கி.பி. 1065) மணவிற் கோட்டத்தில் உள்ள மதுராந்தகநல்லூர், நரசிங்கமங்கலம் மற்றும் இரண்டு கிராமங்களின் சபைகள் இவற்றின் அருகில் உள்ள நிலத்தின்

மீது உரிமை கொண்டாடின. இதன் காரணமாக ஏற்பட்ட நிலத்தகராறு கி.பி. 1090-ல் முதலாம் குலோத்துங்கன் காலத்தில், சுமார் 25 ஆண்டுகள் கழித்து தீர்க்கப்பட்டது. இதன்படி இந்நிலத்தின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு கூவத்தில் எழுந்தருளி இருக்கும் இறைவனுக்குத் தானமாக வழங்கப்பட்டது. இம்முறையில் நிலத்தகராறும் தீர்க்கப்பட்டது.

திரிபுவனச் சக்கரவத்திகள் குலோத்துங்கனின் 15-ஆம் ஆண்டில் மணவிற்கோட்டத்து, பழையனூர் நாட்டில் பழையனூர் என்ற ஊரைச் சேர்ந்த கச்சிகடம்பன் தழுவக் குழைந்தான் உய்யவந்தான் என்னும் செம்பியன் விழப்பரையன் இக்கோயிலில் விளக்கெரிக்க 20 காசுகள் அளித்த செய்தியும், இதே மன்னனின் நாற்பத்தெட்டாவது ஆட்சியாண்டில் இக்கோயில் விருஷப வாகன தேவருக்கு, பூஜைக்காக அளிக்கப்பட்ட நிலதானம் பற்றிய செய்தியும் கல்வெட்டின் மூலம் அறியப்படுகின்றன.

முதலாம் குலோத்துங்கனின் 42-ஆம் ஆட்சியாண்டில். திரிபுவனமாதேவி பேரேரி பழுதுபார்க்கப்பட்டது. இதனைப் பழுதுபார்க்க மீன் பட்டம் (மீன் பிடித்தலுக்காக வசூலிக்கப்படும் வரி) வழங்கப்பட்டது எனக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் மூலம் இவ்வேரியிலிருந்து பெறப்படும் வருமானம், அவ்வேரியின் நலத்திற்கே பயன்படுத்தப்பட்டதை அறியமுடிகிறது. கி.பி. 11-ல் கூவம் எனப்படும் மதுராந்தக நல்லூர் ஜயங்கொண்ட சோழமண்டலத்தில் மணவிற் கோட்டத்தில் கானற்றூர் நாட்டில் இருந்தது எனத் தெரிகிறது.

இரண்டாம் குலோத்துங்கனின் எட்டாம் ஆட்சியாண்டில், இவ்வூருக்கு தியாக சமுத்திர நல்லூர் எனப் பெயர் வழங்கப்பட்டது. தியாக சமுத்திரன் என்பது விக்கிரம சோழனின் மற்றொரு பெயராகும். ஆகையால் தியாக சமுத்திர நல்லூர் என்பது இவனின் காலந்தொட்டு வழங்கப்பட்டுள்ளது. இதே பெயர் விஜயகண்ட கோபாலனின் காலத்திலும் தொடர்ந்து இருந்து வந்துள்ளது. கூவம் கோயிலில் விளக்கெரிக்க ஊற்றுக்காட்டுக் கோட்டத்து வைகாவூர் என்ற ஊரினைச் சேர்ந்தவன் 10 பணம் அளித்துள்ள செய்தியும் அறியப்படுகிறது.

பாண்டிய மன்னன் மாறவர்மன் குலசேகரன் தன் பெயரால் "குலசேகர சந்தி" என்ற நிவந்தத்தினை விளக்கெரிக்க வழங்கியுள்ளான். ஆகையால், சோழர் ஆட்சிக்குப் பின்னர், இப்பகுதி பாண்டியர்களின் ஆளுகையின் கீழ் வந்துள்ளது. கி.பி 17-ஆம் நூற்றாண்டில் விஜயநகர அரசர்களின் காலத்திலும், கோல்கொண்டா சுல்தானின் காலத்திலும் பல தானங்கள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் இக்கோயிலில் வழிபாடு செய்யப்பட்டு வருகிறது.

மற்ற சிவன் கோயில்களைப் போன்று இக்கோயிலிலும் பங்குனி உத்திரத் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அப்போது இறைவனின் அபிஷேகப்பால், இவ்வூர் அருகில் உள்ள பிஞ்சிவாக்கத்திலிருந்து வருகிறது. திருமஞ்சள் நீராட்டிற்காக நீர், பேரம்பாக்கம், குமரஞ்சேரி ஆகிய ஊர்களிலிருந்து வருகிறது. இவ்வூரில் இருக்கும் உத்திராட்சை மரம் சிறப்புற்று விளங்குகிறது.

கூவத்து இறைவன் தீண்டாத் திருமேனியன் என்றும் புகழப்படுகிறார். நாட்டில் அதிக மழையிருந்தால், இறைவன் மீது வெண்ணிறப் படர்வு தோன்றுமாம். யுத்தம் நேரிடும் போது செந்நிறம் படர்தலும் காணப்படுவதாகவும் இவ்வூரார் கூறுகின்றனர். இதனை எண்ணித்தான் சம்பந்தர், "ஐயன் நல் அதிசயன்" எனவும் "வண்ண வண்ணவான்" என்றும் இறைவனை அழைத்தார் போலும். திருவள்ளூர் மாவட்டத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர்களில் கூவமும் ஒன்றாகும்.

## மப்பேடு

மதுரை மீனாட்சியம்மை கோயில் திருப்பணிமாலைப் பாடல்களிலே அரியநாதர் என்ற மதி மந்திரி மீனாட்சியம்மை கோயிலுக்குச் செய்துள்ள திருப்பணிகளை விவரித்துக் கூறியிருக்கிறது. கி.பி. 15-16-ஆம் நூற்றாண்டில் தென்னாட்டை ஆண்ட மிகச் சிறந்த விஜயநகர அரசர் கிருஷ்ண தேவராயர். அவரது ஆட்சியில் மகா

மண்டலேசுவராக இருந்தவர் நாகம்ம நாயக்கர் என்பவர், இவர்தான் தமிழகத்தில் பிற்காலத்தில் ஆட்சி செய்த நாயக்க வம்சத்தைத் தோற்றுவித்தவர். அவரிடத்தில் கணக்கப் பிள்ளையாக இருந்து படைத்தளபதியாகவும் மந்திரியாகவும் உயர்ந்தவர் தளவாய் அரியநாத முதலியார் ஆவார். மதுரை நாயக்க மன்னர்களின் அரசாட்சியின் கீழ் 72 பாளையப்பட்டுகளை ஏற்படுத்தி அவர்களுடைய ஆட்சியை முனைப்படுத்தியவர். மதுரையில் ஆயிரக்கால் மண்டபத்தைக கட்டினார். இத்தகைய அரும்பணிகளைச் செய்த அரியநாதர் பிறந்த ஊர்தான் திருவள்ளூர் வட்டத்தில் உள்ள மப்பேடு என்ற கிராமம்.

மப்பேடு அல்லது மெய்ப்பேடு எனப்படும் அழகிய அமைதி தவழும் ஊர் சென்னையிலிருந்து பேரம்பாக்கம் செல்லும் வழியில் திருவள்ளூரிலிருந்து சுமார் 22 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்த ஊரில் சிங்கேசுவரர் கோயில் கிழக்குப்புறம் பார்த்து உள்ளது. கோயிலின் தென்திசையை நோக்கியுள்ள கோபுரத்தில் விஜயநகர அரசர்கள் காலத்திய கட்டிடக்கலைக்குச் சான்றாக சால பஞ்சிகா எனப்படும் தலை வாயிலின் இருபுறமும் வாயிற்கொடிப் பெண்களும் கோபுரத்தின் உட்புறம் இராமாயணக் காட்சிகளாக குழந்தை நீராட்டல், இராமர், சீதை, இலக்குமணர் போன்ற சிற்பங்களும் காணப்படுகின்றன.

விநாயகருக்கும், முருகருக்கும் மப்பேடு கோயிலின் உள்ளே தனித்தனிச் சன்னதிகள் உள்ளன. விமானத்தின் மேல் நான்குபுறத்திலும் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரின் சுதைச் சிற்பங்களும் சிவபெருமானின் எட்டு வீரச் செயல்களும், காஞ்சிபுரத்தில் உள்ள ஏகாம்பரேசுவர சுவாமி கோயிலின் புராணத்தோடு தொடர்புடைய சிவலிங்கத்தைத் தழுவிய தேவியின் சுதைச் சிற்பமும் காணப்படுகின்றன. மேற்குப்புறத்தில் உள்ள திருமுருகன் சன்னதியின் வெளிப்பிராகாரத்தில் கருவறையின் இடப்புறம் சிற்பங்கள் காணப்படுகிறன. இறைவியின் திருநாமம் புஷ்பகுஜாம்பாள் என்பதாகும். இந்த சன்னிதியின் கிழக்குப் புறத்தில் பதினாறுகால் மண்டபம் இடிந்த நிலையில் காணப்படுகிறது. இதன்

அருகில் உள்ள சிறு சன்னதியிலே சிவலிங்கம் வழிபாடு செய்யப்படுகிறது. தேவி சன்னதியை ஒட்டிய மகாமண்டபம் விஜய நகர அரசர் காலத்திய கட்டிடச் சிற்பக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக, அரிய வேலைப்பாடுகளுடன் காணப்படுகிறது. மப்பேடு கோயிலின்முன் கொடிமரம் இல்லை. கருவறையில் தென்புறத் தேவகோட்டத்தில் விநாயகரும், ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியும், வடபுறத்தில் பிரம்மாவும், துர்க்கையும், மேற்குப்புறம் உள்ள தேவகோட்டத்தில் விஷ்ணுவும் குடிகொண்டுள்ளனர். "வீரபாண்டியன் தலை கொண்ட" என்ற பட்டப்பெயர் கொண்ட சோழ மன்னனாகிய இரண்டாம் ஆதித்திய கரிகாலன் (கி.பி. 967) காலத்தில் இறைவன் சிங்கேசுவரர் என வழங்கப்பட்டுள்ளார்.

இந்தக் கல்வெட்டின் புறத்தில் சிதைந்த கல்வெட்டு சோழர் காலத்திய எழுத்துக்களின் வடிவைக் கொண்டுள்ளது. இந்த ஊர், செங்காடு கோட்டத்து, செங்காடு எனும் நாட்டில் இருந்து வந்துள்ளது எனத் தெரிகிறது. விஜயநகர அரசர் சதாசிவராயரின் காலத்திய ஒரு கல்வெட்டும் இங்கே காணப்படுகிறது. சோழர் காலத்திய கல்வெட்டுகள் காணப்படுவதால், அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட இந்தக் கோயில் பின்னர், விஜயநகர அரசர்கள் ஆட்சிக் காலத்தில் அவர்களது பிரதானியாக இருந்த தளவாய் அரியநாத முதலியாரின் முயற்சியால் விரிவுபடுத்தப்பட்டுக் கோபுரம் கட்டப்பட்டுள்ளது.

இந்தக் கோயிலில் கி.பி. 16–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செப்பேடு ஒன்று உள்ளது. இந்தச் செப்பேடு வடமொழி நந்தி நாகரீ எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. மொத்தம் மூன்று தகடுகளைக் கொண்ட இந்தச் செப்பேடு ஒரு வளையத்தால் கோர்க்கப்பட்டுள்ளது. இதில் விஜயநகர அரசர்களின் முத்திரையான வராகம் உருவம் காணப்படுகிறது. செப்பேட்டின் ஒரு புறமே எழுத்துக்கள் காணப்படுகின்றன.

அருமா தவம் செய் அறுபத்து மூவரவர் மண்டபம்
மருவாரும் சோலை அறச்சாலை மண்டபம் வன்னியடி
முருகேசன் சொக்கற்கு வெள்ளிச்சிங்காதனம் முற்றும் செய்தால்
வருமால் அரிய நயினா முதலி மதி மந்த்ரியே

இச்செப்பெட்டில் விஜயநகர மன்னர் கிருஷ்ணதேவராயர் (கி.பி. 1509-1529) திருமங்கலம் என்று அழைக்கப்பட்ட ஊருக்குத் தெற்கில் உள்ள ஒரு இடத்தைக் கிருஷ்ணராயபுரம் என்ற தம்முடைய பெயரை இட்டு அந்தணர்களுக்குத் தானமாக (சர்வமான்யமாக) வழங்கியுள்ளார். இதில் அந்தணர் பூசரர் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்த அந்தணர்களின் கோத்திரங்கள் மற்றும் சூத்திரத்துடன் ஒவ்வொருவரின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. சக ஆண்டு 1435-இல் (கி.பி. 1513) தை மாதம் மகர சங்கிராந்தி தினத்தன்று அதாவது தைப்பொங்கல் அன்று மார்க சீர்ஷ மார்கழி மாதம், ஸ்ரீமுக ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் செப்பேட்டில் செப்பேட்டை வழங்கிய கிருஷ்ணதேவராயருக்கு முன்னர் ஆட்சி செய்த ஸ்ரீவீர நரசராயரின் நினைவாக வேங்கடம் முதல் உள்ள பல கோயில்களை புதுப்பித்தும், ஆயிரம் பசுக்களை தானம் செய்தும், அந்த கோயில்களுக்குத் தேர்களையும் கிருஷ்ணதேவராயர் செய்த செய்தி கூறப்பட்டுள்ளது. இந்தச் செப்பேட்டில் விஜயநகர அரசர்களின் புராண காலம் தொடங்கி அவர்களுடைய பரம்பரையினர் பெருமை பேசப்படுகிறது. செப்பேட்டின் இறுதிவரியில் பொதுவாகச் செப்பேடுகளில் காணப்படுவது போல இந்தச் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தர்மங்களுக்குக் கேடு செய்பவர்கள் அனுபவிக்க நேரும் பாவம் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது.

எனவே சோழர்காலத்தில் சிற்றூராக இருந்த இவ்வூர், விஜயநகர அரசின் மாட்சிமைப் பெற்றிருந்தது எனத் தெரிகிறது.

## சிறுவானூர்

சிறுவானூர் என்னும் கிராமத்தில் கிணறு தோண்டும் போது கி.மு. 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திய மட்கலங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. சிறுவானூரில் திரு. ராதா செட்டியார் என்பவர் நிலத்தில் கிணறு தோண்டும் போது பெருங்கற்கால ஈமத்தாழிகள் இரண்டு, ஒரு சிறிய மட்பானை, இரு உடுக்கை போன்ற தாங்கிகளும். சில கருப்பு சிவப்பு பானை ஓடுகளும் கிடைத்தன.

இம்மட்கலங்களில், ஈமத்தாழிகள் இரண்டின் கழுத்துப் பகுதியைச் சுற்றி கறுப்பு நிறத்தினால் வரைகோடுகள் தீட்டப்பட்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டது. சிவப்பு நிறத்தாழிகள் இரண்டிலும், சிறிய சிவப்பு நிறப்பானையிலும் குறியீடுகள் காணப்படுகின்றன. இக்குறியீடுகளை மட்கலங்கள் சுடப்பட்ட பின்னர் பொறிக்கப்பட்டவை ஆகும். இரு சாய்கோடுகள் ஒன்றை ஒன்று மேல் நோக்கி சந்திக்கின்றன. அவற்றின் இடையில் மற்றோரு சாய்கோட்டினை, வெளியிலிருந்து ஒரு சாய்கோடு சந்திக்கிறது. அதாவது இரு அம்பு முனைகள் ஒன்றன் மீது ஒன்று கீறப்பட்டுள்ளன. இக்குறியீடுகள் இரட்டை அம்பு குறிகள் அல்லது இரட்டை மீன்களைக் குறிக்கும் குறியீடுகளாகக் கருதலாம்.

தற்போது தான் முதன்முறையாக இக்குறியீடுகள் கிடைத்துள்ளன. இதுவரை இது போன்ற குறியீடு எங்கும் கிடைக்கவில்லை. இக்குறியீடு, பெருங்கற்காலத்தைப் பற்றி அறிவதற்குப் பயன்படும் குறியீடுகளுடன் புதிதாக சேர்ந்துள்ளது.

மேலும், சிறுவானூர் கிராம மட்கலங்கள் அனைத்திலும் காணப்படும் குறியீடுகள் எல்லாம் ஒரே மாதிரியான குறியீடுகளே. இவை பெரும்பாலும் ஈமச்சின்னங்களான மட்கலங்களில் காணப்படுவதால், இறந்தவரின் குலத்தினைக் குறிக்கும் குறியீடாக இருத்தல் கூடும்.

## கவரைப்பேட்டை

கவரைப்பேட்டை திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி வட்டத்தில் அமைந்துள்ள சிற்றூராகும். சென்னையிலிருந்து சுமார் 40 கி.மீ. தூரத்தில் இவ்வூர் உள்ளது. இராவணன் சீதையை இலங்கை மாநகருக்கு எடுத்துச் செல்லும்போது, சீதை தான் அணிந்திருந்த இரத்தினாபரணங்களை இங்குக் கழற்றி எறிந்ததால் இவ்வூர் இரத்தினாபுரி என்றும் அழைக்கப்படுகிறது. இதற்கேற்றவாறு இவ்வூர் மக்களில் பெரும்பாலோர் இன்று இரத்தின வியாபாரிகளாகவும்,

விலையுயர்ந்த கற்களுக்கு பட்டைதீட்டும் தொழிலாளர்களாவும். விளங்குகின்றனர். தெலுங்கு மொழியினைத் தாய் மொழியாகக் கெண்ட கவரை இன மக்கள் பெரும்பாலோர் வாழ்வதால் இவ்வூர் தற்போது கவரைப்பேட்டை என வழங்குகிறது.

இவ்வூரில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கோயில்கள் ஏதும் இல்லையெனினும், இதனைச் சுற்றியுள்ள ஊர்கள் தொன்மைச் சிறப்புடையவை.

## கும்முடிப்பூண்டி

திருவள்ளூர் மாவட்டத்தில் சென்னைக்கு வடக்கே 40 கி.மீ. தூரத்தில் உள்ளது. கோமுடிபூண்டி என்ற அந்நாளைய பெயர் மருவி கும்முடிப்பூண்டி என்று வழங்கப்பெறுகிறது.

### குறும்பர் கோட்டை

இவ்வூரின் வடக்குப் பகுதியில் பெரியமேடு காணப்படுகின்றது, இதனை இவ்வூர் மக்கள் "கோட்டைமேடு" என்று அழைக்கின்றனர். இம்மேட்டின் மீது தற்போது கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகமும் அலுவலர் குடியிருப்புகளும் அமைந்துள்ளன. இம்மேடுதான் அந்நாளில் குறுநில மன்னர்கள் இருந்து ஆட்சிபுரிந்த அரண்மனை அமைந்த கோட்டைப் பகுதியாகும். இக்கோட்டை குறும்பர் கோட்டை என அழைக்கப்பெறுகிறது. இம்மேட்டுப் பகுதியில் மேற்கொண்ட ஆய்வில் அகன்ற நீண்ட பெரிய செங்கற்களும் முதுமக்கள் தாழி ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டன. இம்மேட்டின் கிழக்குப்புறத்தில் பெருங்கற்கால கருப்புசிவப்பு வண்ண பானை ஓடுகள் சிலவும் கிடைத்துள்ளன. இதன் மூலம் இப்பகுதியில் மக்கள் தொன்றுதொட்டு வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்று தெளிவாக அறியலாம்.

### பாலீஸ்வரி கோயில்

இக்கோயில் கும்முடிப்பூண்டி இரயில் நிலையத்திற்கு அருகில் மிகவும் சிதைந்து புதர் மண்டியுள்ள நிலையில் காணப்படுகிறது. முதலாம்

இராசேந்திர சோழன் கங்கையைக் கொண்டு திரும்பும் வழியில் இங்கு இக்கோயில் எழுப்புவித்தான் என்னும் செவிவழி செய்திக்கு ஆதாரமாக இங்கு கல்வெட்டுகள் ஏதும் காணப்படவில்லை. ஆனால் கருவறையைச் சுற்றியுள்ள சிற்றறைகளில் காணப்பபடும் திருமால், அடிமுடிகாணா அண்ணல்(லிங்கோத்பவர்) போன்ற சிற்பங்கள் சோழர் காலக் கலைப்பாணியைக் கெண்டு விளங்குகின்றன. குறிப்பாகக் கோயில் மதிற்சுவருக்கு அருகில் மணல் புதைந்துள்ள தட்சிணா மூர்த்தியின் சிற்பம் மேலிருகரங்களில் அக்கமாலையும், மலரும் ஏந்தி கீழ் வலது கரத்தை யோக முத்திரையில் இருத்தி இடது கரத்தைத் தொடையில் அமர்த்தி, இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கவிட்டு ஆசனத்தில் அமர்ந்து யோக நிலையில் காணப்படுகிறது. இச்சிற்பம் கங்கைகொண்ட சோழபுரம் சோழீஸ்வரர் ஆலயத்தின் தென்புறச்சுவரில் ஐந்தாவது சிற்பமாக விளங்கும் 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த யோக தட்சிணாமூர்த்தி சிற்பத்தோடு ஒப்புநோக்கத்தக்க கலைச்சிறப்போடு விளங்குகிறது.

## சந்திரசேகர ஈஸ்வரர் கோயில்

இக்கோயில் புதுகும்முடிப்பூண்டியில் கருங்குப்பம் பகுதியில் அமைந்துள்ளது. கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்ட இக்கோயிலின் முன்பு சிதைந்த நிலையில் கோபுர வாயில் காணப்படுகிறது. கிழக்கு நோக்கியுள்ள கருவறை வாசலின் மேற்பகுதியில் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது. கிழக்கு நோக்கியுள்ள கருவறை வாசலின் மேற்பகுதியில் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது. சில பகுதிகளில் காரை பூசப்பட்டிருப்பதாலும், சில இடங்களில் எழுத்துக்கள் சிதைக்கப்பட்டிப்பதாலும் கல்வெட்டு முழுமையாகக் கிடைக்கவில்லை. கல்வெட்டின் இறுதிப்பகுதி மட்டும் தெளிவாக உள்ளது.

## கல்வெட்டு

. . . . . . . . . . . . . . . . . . . . . பெரியப்பா
ளையம் நகரத்தாரில் கண்ணந்
செய்பு சேகர கோயில் திருப்பணி
வேலை நிற்றசதா சேர்வை

இக்கல்வெட்டில் பெரியபாளையம் என்னும் நகரைச் சேர்ந்த சின்னம நயினா என்பவர் இக்கோயிலுக்கு செய்த திருப்பணியைத் தும்மணி குமாரன் தும்மணி என்பவர் தொடர்ந்து செய்ததாகக் குறிக்கப்பெறுகிறது. இக்கோயிலின் பெயர் சந்திரசேகர கோயில் எனவும், இன்று சிற்றூராகவும், சிறப்பமைந்த அம்மன் கோயிலோடும் விளங்கும் பெரியபாளையம் நகரம் எனவும் இக்கல்வெட்டு குறிக்கிறது. எழுத்தமைதியைக் கொண்டு இக்கல்வெட்டு 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக்கொள்ளலாம்.

இக்கோயிலுள்ள சந்திரசேகர மூர்த்தியின் செப்புத் திருமேனியும் அழகு வாய்ந்தது. ஜடாமகுடத்தில் பிறைச்சந்திரனோடு, மேலிரு கரங்களில் மானும், மழுவும் கொண்டு கீழிரு கரங்களை அபய வரத முத்திரைகளிலிருத்தி விளங்கும் நிலை நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது. சோமாஸ்கந்தர், நடராசர் போன்ற செப்புத் திருவுருவங்களும் இக்கோயிலில் உள்ளன.

## விநாயகர் கோயில்

சந்திரசேகரர் கோயிலுக்கு எதிர்ப்புறத்தில் இக்கோயில் உள்ளது. அதன் கருவறையில் இருந்த விநாயகர் சிலை தற்போது சந்திரசேகரர் கோயிலில் வைக்கப்பட்டுள்ளது. கருவறை வாசலின் மேற்பகுதியில் மிகவும் சிதைந்த நிலையில் ஒரு கல்வெட்டு உள்ளது. இதில் இவ்வூர் கொம்முடிப்பூண்டி என்று குறிக்கப்படுகிறது. திருவலங்காடு, பெரியபாளையம் போன்ற ஊர்களின் பெயர்களும் காணப்படுகின்றன. கல்வெட்டின் இறுதிப்பகுதி

. . . . . . . கண்ணந்தை கோத்றம்
சின்னமனயினா செட்டியார் குமாரன் தும்மணி
செட்டியார் குமரன் தும்மணி செட்டிய
ார் குமரன் தும்மணி . . . . . . . திருப்பணி . . . . . .

எனப்பொறிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து மேற்கூறப்பட்ட சந்திரசேகரர் கோயில் திருப்பணியைச் செய்த தும்மணி செட்டியார் குமாரன் தும்மணி இக்கோயில் திருப்பணியைச் செய்துள்ளார் என்பது அறியப்படும்.

### பிரசன்ட வெங்கடேச பெருமாள் கோயில்

கும்முடிப்பூண்டிக்கு சுமார் 3 கி.மீ. தொலைவில் பாப்பாங்குப்பம் என்னும் சிற்றூரில் அமைந்துள்ளது. கோயில் கருவறை, முன்மண்டபம், மகாமண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டது. கருவறையின் மேல் விமானம் உயர்ந்து காணப்படுகிறது. கோயிலைச் சுற்றிப் பரிவாரக் கோயில்களும் உண்டு. வெங்கடேச பெருமாள் பத்மாவதி, அலமேலு மங்கையுடன் காட்சியளிக்கிறார். போக சீனிவாசரின் செப்புத் திருமேனி கலைச்சிறப்பு வாய்ந்தது. மகுடம் தரித்து, மேலிரு கரங்களில் ஆழியும் சங்கமும் கொண்டு, கீழ்வலது கரம் அபய நிலையிலும் இடதுகரம் தொடையிலுமாக அமைந்த நிலையில் காணப்படுகிறார். சந்திரன் போன்ற வட்டவடிவமான முகம் கொண்டு, மார்பில் முப்புரி நூல் தரித்து இடையில் ஆடையுடன் காணப்படும் இவ்வுருவம் சோழர் காலப் படைப்பாகும். கலை அழகு மிகுந்த சுமார் 14 செப்புத் திருவுருவங்கள் இக்கோயிலில் உள்ளன.

## சுப்பாரெட்டிபாளையம்

### அமைவிடம்

சுப்பாரெட்டிபாளையம் பொன்னேரி வட்டத்தில் மீஞ்சூருக்குத் தெற்கே 7.கி.மீ. தூரத்தில் உள்ளது. கொற்றலையாற்றின் தென்கரையில் அமைந்துள்ள இச்சிற்றூரினைச் சுற்றிலும் வரலாற்றுக் கலைச் சிறப்பு வாய்ந்த பல சிற்பங்கள் போற்றுவாரில்லா நிலையில் சிதறிக் கிடக்கின்றன. இக்கலைச் செல்வங்களின் சிறப்பினை வரலாற்றுலகிற்கு எடுத்துரைப்பது இன்றியமையாததாகும்.

### விஷ்ணு சிலை

ஊருக்கு வடமேற்கில் சுமார் ஒரு கி.மீ. தூரத்தில் கொற்றலை யாற்றின் வடகரையில் முற்காலச் சோழர் கலைப்பாணியைச் சேர்ந்த விஷ்ணு சிலை ஒன்று நிற்கும் நிலையில் காணப்படுகிறது. அடிமுதல்

முடிவரை 87 செ.மீ. உயரமும் 41செ.மீ. அகலமும் உடைய இச்சிலையின் கீழ் வலது கரம் சிதைந்துள்ளது. கீழிடது கரம் தொடை மீது அமர்ந்துள்ளது. தலையில் அழகு மிக்க கீரிடமகுடம் காணப்படுகிறது. மார்பில் காணப்படும் புரிநூலின் ஒரு பகுதி பாதம் வரை சென்றுள்ளது. மார்புப்பகுதியும் வயிற்றுப்பகுதியும் வளைவுகளின்றிச் சமமான தோற்றத்துடன் காணப்படுகின்றன. இடுப்பில் அணிந்திருக்கும் ஆடை கணுக்கால் வரை நீண்டு கச்சையின் ஒரு பகுதி முன்னால் வளைந்துள்ளது.

### மகாவீரர் சிலை

சுப்பாரெட்டிபாளையத்திற்கு மேற்குப்புறத்தில் வயலில் இருபத்து நான்காவது தீர்த்தங்கரரான மகாவீரரின் சிலை ஒன்று உள்ளது. இதனை இவ்வூர் மக்கள் எண்ணெய்ச் சாமியார் என்று அழைக்கிறார்கள். அமர்ந்த நிலையில் காணப்படும் மகாவீரரின் சிலை சோழர் காலத்தைச் சேர்ந்ததாகும்.

### சீமாவரம் சப்தமாதர்கள்

சுப்பாரெட்டிபாளையத்திற்கு மேற்கே இரண்டு கி.மீ. தூரத்தில் சீமாவரத்தில் மயிலையம்மன் கோயில் உள்ளது. கோயில் தற்காலத்தியது. கருவறை கிழக்கு நோக்கியுள்ளது.

இக்கோயிலில் பல்லவர் காலத்தைச் சேர்ந்த மாஹேஸ்வரி சிலையும், பிற்காலப் பல்லவர் கலைப்பாணியைச் சார்ந்த தாய்மார் எழுவர் சிலைகளும், யோகேஸ்வரர், விநாயகர் போன்றோர் சிலைகளும் காணப்படுகின்றன. இச்சிலைகள் யாவும் சென்னை மயிலையிலிருந்து இங்கு கொண்டு வந்து வைத்ததாகக் கூறப்படுகிறது. எனவேதான் இக்கோயில் மயிலையம்மன் கோயில் என்று அழைக்கப்பெறுகிறது.

### பல்லவர் கால மாஹேஸ்வரி

இச்சிலை 45 செ.மீ. உயரமும் 27 செ.மீ. அகலமும் கொண்டு சிறிய அளவினதாகக் கண்கவர் அழகுடன் காணப்படுகிறது. சிலை வடிக்கப்பட்டுள்ள கல் பசுமையாக உள்ளது. பத்ர பீடத்தில் அமர்ந்து

மேலிருகரங்களில் மானும் மழுவும் கொண்டு, கீழ் வலது கரத்தினை அபய முத்திரையிலிருத்தி, இடது கரத்தினைத் தொடைமீது வைத்துள்ள நிலை பரவசமூட்டக் கூடியதாக உள்ளது. நெற்றியில் நெற்றிக்கண் உள்ளது. மார்பினில் காணப்படும் புரிநூல் வலது கைமீது ஏறிச் செல்கிறது. அரையில் அணிந்துள்ள ஆடை பாதம் வரை நீண்டுள்ளது.

சீமாவரத்தில் காணப்படும் சப்தமாதர்களின் சிலைகள் அனைத்தும் அமர்ந்த நிலையில் நாற்கரங்களுடன் காணப்படுகின்றன. மேற்கரங்களில் அவரவர்களுக்குரிய ஆயுதங்களைத் தாங்கி யுள்ளார்கள். கீழ்க்கரங்கள் அபயமுத்திரையிலும் தொடைமீது வைத்த நிலையிலும் உள்ளன. திருத்தணி வீரட்டானேஸ்வரர் கோயிலில் காணப்படும் சப்த மாதர்களைப் போன்று பீடங்களில் அவரவர்களுடைய வாகனங்கள் காணப்படுவது இச்சிலைகளின் சிறப்பாகும். சில சிலைகள் மேலிருகரங்களில் வழக்கமாக கொண்டிருக்கும் ஆயுதங்களுக்குப் பதிலாக வேறு ஆயுதங்களைக் கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, வராகி சங்கு சக்கரத்திற்கு பதிலாக, பாசமும் கலப்பையும் தாங்கியுள்ளாள். பீடத்தில் சிம்மத்திற்குப் பதிலாக ஆட்டினை வாகனமாக கொண்டுள்ளாள். இந்திராணி சக்தி வச்சிரத்திற்குப் பதிலாக வச்சிரம், சக்கரம் ஆகியவற்றைக் கொண்டுள்ளாள். சாமுண்டி மேல் இடது கரத்தில் உடுக்கைக்குப் பதிலாகக் கபாலத்தினை ஏந்தியுள்ளாள். பீடத்தில் எருமைக்குப் பதிலாகப் பேய் காணப்படுகிறது.

சப்த மாதர்களுடன் வழக்கமாக காணப்படும் யோகேஸ்வரர் விநாயகர் போன்ற சிலைகளும் அமர்ந்த நிலையில் உள்ளன. யோகேஸ்வரர் சிலையின் ஆசனத்தின் கீழ் நந்தி வாகனம் காணப்படுகிறது. இவைகளும் பிற்காலப் பல்லவர் காலத்தவையே.

## மயிலையம்மன் கோயில் சீமாவரம் சப்த மாதர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. யோகேஸ்வரர் | அக்கமாலை | திரிசூலம் | பீடத்தில் |
| | அபயம் | தொடை மீது அமர்ந்த நிலை | நந்தி வாகனம் |
| 2. இந்திராணி | வச்சிரம் | சக்கரம் | |
| | அபயம் | தொடை மீது அமர்ந்த நிலை | யானை வாகனம் |
| 3. வராகி | பாசம் | கலப்பை | |
| | அபயம் | தொடைமீது அமர்ந்த நிலை | ஆடு வாகனம் |
| 4. கௌமாரி | சக்தி | வஜ்ரம் | |
| | அபயம் | தொடைமீது அமர்ந்த நிலை | மயில் வாகனம் |
| 5. மாஹேஸ்வரி | மழு | மான் | |
| | அபயம் | தொடைமீது அமர்ந்த நிலை | காளை வாகனம் |
| 6. பிராமி | அக்கமாலை | கெண்டிகை | |
| | அபயம் | தொடைமீது அமர்ந்த நிலை | அன்ன வாகனம் |
| 7. சாமுண்டி | திரிசூலம் | கபாலம் | |
| | அபயம் | தொடைமீது அமர்ந்த நிலை | பேய் வாகனம் |
| 8. வைணவி | சக்கரம் | சங்கு | |
| | அபயம் | தொடைமீது அமர்ந்த நிலை | கருட வாகனம் |
| 9. விநாயகர் | அங்குசம் | பாசம் | |
| | தந்தம் | மோதகம் | |

## ஞாயிறு

### ஊரமைவு

ஞாயிறு பொன்னேரி வட்டத்தில் மீஞ்சூருக்கு மேற்கே 6 கி.மீ. தூரத்தில், காரனோடைக்கு கிழக்கே 8 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. இவ்வூரில் பழமைமிக்க இரண்டு சிவன் கோயில்கள் உள்ளன.

### ஊரிச் சிறப்பு

சிவபெருமானைச் சூரிய பகவான் இவ்விடத்தில் வழிபட்டதாலேயே இவ்வூர் ஞாயிறு என்று பெயர் பெற்றது. சுந்தரமூர்த்தி நாயனாரின் மனைவியாராகிய சங்கிலிநாச்சியார் இவ்வூரில் தோன்றினார் என்பதனைப் பெரிய புராணம்,

> நாலாங்குலத்திற் பெருக நலம் உடையார் வாழும் ஞாயிற்றின்
> மேலாங் கொள்கை வேளாண்மை மிக்க திருஞா யிறுகிழவர்
> பாலா தரவு தருமகளா ராகிப் பார்மேல் அவதரித்தார்
> ஆலா லஞ்சேர் கறைமிடற்றார் அருளால் முன்னை அநிந்திதையார்
>
> - பாடல். 207

என்னும் பாடல் மூலம் விளங்குகிறது. சங்கிலி நாச்சியார் வழிபட்டதாகக் கூறப்படும் ஒரு சிறிய சிவன் கோயில் இவ்வூரில் இன்றும் காணப்படுகிறது. லிங்கம், நந்தி, விநாயகர் ஆகியவற்றைக் கொண்டு விளங்கும் இக்கோயில் தற்போது புதுப்பித்து கட்டப்பட்டுவருகிறது.

### புஷ்பரதேஸ்வரர் கோயில்

இக்கோயில் ஊருக்கு மேற்குப் புறத்தே அமைந்துள்ளது. முன் மண்டபம், மகா மண்டபம், அலங்கார மண்டபம் ஆகியவற்றைக் கொண்டுள்ள கோயிற் கருவறை கிழக்கு நோக்கியுள்ளது. ஸ்வர்ணாம்பிகை என்று அழைக்கப்படும் தேவிக்குத் தனிக்கோயில் உண்டு. தெற்கு நோக்கியுள்ள கோபுரவாயில் முற்றுப் பெறாத நிலையில் உள்ளது. இக்கோயிற் சிற்பங்களில் குறிப்பிடத்தக்கது, பரிவாரக் கோயிலில் உள்ள முற்கால சோழர் காலத்தைச் சேர்ந்த சண்டிகேஸ்வரர் சிற்பமும், ஸ்வர்ணாம்பிகை கோயிலிலுள்ள விஜயநகர காலத்தைச் சேர்ந்த சங்கிலி நாச்சியார் சிற்பமும் ஆகும். சங்கிலி நாச்சியார் தம் பிறந்த

ஊராகிய ஞாயிற்றில் உள்ள சிவபெருமானை வழிபட்டு வந்ததாகப் பெரிய புராணத்தில் சங்கிலிநாச்சியார் வரலாறு கூறும். சிற்பத்தில் சங்கிலி நாச்சியார் இடது கையில் பூக்கடையைத் தாங்கி, கூப்பிய கரங்களுடன் காணப்படுகிறார்.

கருவறையின் பின்புறச் சுற்றுச் சுவரில் காணப்படும் துர்க்கை, பிரம்மா, லிங்கோத்பவர், தட்சிணாமூர்த்தி போன்ற சிற்பங்கள் சோழர் காலத்தைச் சேர்ந்தவை. அலங்கார மண்டப வாயிலின் வலப்புறம் காணப்படும் கண்வ மகரிஷியின் சிற்பம் பிற்காலத்தாயினும் கலையழகு மிக்கதாகும். சோழர் காலந்தொட்டு விஜயநகர காலம் முடிய தோற்றுவிக்கப்ட்ட 14 செப்புத்திருமேனிகள் இக்கோயிலில் காணப்படு கின்றன. இவற்றுள் பிரதோஷ மூர்த்தியின் செப்புருவம் கண்கவர் சோழர் காலப் படைப்பாகும்.

## கல்வெட்டுகள்

புஷ்பரதேஸ்வரர் கோயிலில் பாண்டியர் காலக் கல்வெட்டு ஒன்றும், விஜயநகர காலக் கல்வெட்டுகள் இரண்டும் காணப்படுகின்றன. பாண்டியர் காலக் கல்வெட்டு ஜடாவர்மன் திரிபுவன சக்கரவர்த்திகள் சுந்தர பாண்டிய தேவனின் 14-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்ததாகும். மிகவும் சிதைந்துள்ளதால் கல்வெட்டு கூறும் செய்தியினைத் தெளிவாக அறிய இயலவில்லை. ஈழத்திலிருந்து திறை வசூலித்த விஜயநகர மன்னன் வீரபிரதாப தேவராயரின் கல்வெட்டில் இவ்வூர் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து, புழல் கோட்டத்து; ஞாயிற்று நாட்டை சேர்ந்த ஞாயிறு என்று அழைக்கப்படுகிறது. புஷ்பரதேஸ்வரர் பூத்தேர் ஆண்டார் என்று குறிப்பிடப்படுகிறார். கி.பி. 1526-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட விஜயநகர மன்னன் வீரபிரதாப அச்சுதய்ய தேவமாகராயர் காலக் கல்வெட்டு பூத்தேர் விளாகம் என்னும் கிராமத்தினை இக்கோயிலுக்குக் கொடையாக அளித்த செய்தியைக் கூறுகிறது. இக்கொடையை அளித்தவன் கந்தனவோலு என்னும் ஊரினைச் சேர்ந்த பொன்னப்ப நாயக்கர் மகன் நாகம நாயக்கர் என்பவராவார். இக்கல்வெட்டில் காணப்பெறும் கந்தனவோலு என்னும் ஊர் தற்போது ஆந்திரபிரதேசத்திலுள்ள கர்னூலைக் குறிக்கும்.

## சிறுவரம்புரி (சின்னப்பேடு)

இவ்வூர் கும்மிடிப்பூண்டி வட்டத்தில் சென்னை வடக்கே ஜ.என். டி. சாலையில் சுமார் 35கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள தொன்மைச் சிறப்புமிக்க ஊராகும். இராமபிரான் குதிரைவேள்வி செய்வதற்கு விட்டக் குதிரையை குச-லவர்கள் மடக்கப் பிடித்து, இராமனுக்கு எதிராக அம்பெடுத்து சமர் செய்தனர். எனவே இவ்வூருக்கு சிறுவர் இருவர் அம்பெடு என்னும் பெயர் வழங்கியது. நாளடைவில் இப்பெயர் மருவி சிறுவரம்பேடு என வழங்கியவருகிறது. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் இவ்வூரினைச் சிறுவை, சிறுவாபுரி எனக் குறிக்கின்றது. அசுவமேத யாகம் செய்ய எண்ணி, யாக குதிரையை ஏவி விட்டார். அக்குதிரை வால்மீகி முனிவரின் ஆஸ்ரமத்தில் அருகில் மேய்ந்த போது, லவனும், குசனும் அதனைப் பிடித்து கட்டினர். இச்செய்தி அறிந்த இராமன், லட்சுமணை அனுப்பியும் குதிரையை மீட்டுவர இயலாததால், தானே நேரில் வந்து சிறுவர்களை எதிர்த்துப் போரிட்டதால் இவ்வூர் சிறுவாபுரி (சிறுவர் போர் புரிந்த இடம்) சின்னம்பேடு (சின்ன அம்பு பேடு, சிறுவர் அம்பு எடு சிறுவரம்பேடு என்றும் பலவாறாக வழங்கப்பட்டுள்ளது.) பேடு என்பது அம்பு வைக்கும் கூடு என்பதால் சின்னம்பேடு என்ற பெயரே தற்போது வழங்கப்படுகிறது. இவ்வூருக்குச் சரவணம்பேடு, குசலபுரி என வேறு பெயர்களும் உண்டு. இவ்வூரில் வரலாற்றுச் சிறப்புமிக்க பல கோயில்கள் உள்ளன.

### அகத்தீஸ்வரர் ஆலயம்

மாட வீதிகள் அமைந்த இவ்வூரில், கிழக்கு மாடவீதியில் அகத்தீஸ்வரர் ஆலயம் உள்ளது. கோபுரவாயில் சிதைந்து காணப்படுகிறது. அர்த்தமண்டபம், மகாமண்டபம், கல்யாண மண்டபம், சபா மண்டபம் ஆகியவற்றைக் கொண்டு விளங்கும் இக்கோயிலின் கருவறை கிழக்கு நோக்கி உள்ளது. கஜப்பிருஷ்ட அமைப்பைக் கொண்டுள்ள பிரதானக் கோயிலைச் சுற்றிப் பரிவாரக் கோயில்கள் காணப்படுகின்றன. இப்பரிவாரக் கோயில்களில் உள்ள சண்டிகேஸ்வரர்,

பைரவர், சூரியர், ஐய்யனார் போன்ற சிற்பங்கள் சோழர் கலைப்பாணியைக் கொண்டு விளங்குகின்றன. முன் மண்டபத் தூண்களில் காணப்படும் விஜயநகர காலச் சிற்பங்கள் சிறப்பானவைகளாகும்.

### சமணக் கோயில்

ஊரின் வடபுறத்தில் அமைந்துள்ளது. இக்கோயில் மிகவும் சிதைந்த நிலையில் உள்ளது. தெற்கு நோக்கியுள்ள கருவறையில் இருபத்தி மூன்றாவது தீர்த்தங்கரரான பார்சுவ நாதரின் சிற்பம் காணப்படுகிறது. ஆடையின்றி நின்ற நிலையில் காணப்படும் பார்சுவநாதரின் தலைக்குமேல் ஐந்து தலை அரவம் காணப்படுகிறது. அரவின் உடல் தீர்த்தங்கரருக்குப் பின்புறம் வளைந்தவாறு செதுக்கப்பட்டுள்ளது. பார்சுவநாதரின் வலப்புறம் பத்மநிதியும், இடப்புறம் சங்கநிதியும் சிறிய அளவில் வடிக்கப்பட்டுள்ளனர். பத்மநிதியின் தலைக்கு மேலே தாமரை மலரும், சங்கநிதியின் தலைக்குமேலே சங்கும் பொறிக்கப்பட்டுள்ளன. இச்சிற்பம் சோழர் காலத்தைச் சேர்ந்தது.

### கல்வெட்டுகள்

பார்சவநாதர் கோயிற் கருவறையின் கூரைப் பகுதியில் மிகவும் சிதைந்த நிலையில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

1. . . . . சபையோம் . . . . . . .

2. . . . . விரிச்சிக . . .

என்னும் சொற்களை மட்டுமே அறியமுடிகிறது.

### துர்க்கை கோயில்

சமணக் கோயிலுக்குச் சற்றுத் தென்புறத்தில் துர்க்கை கோயில் உள்ளது. கோயில் தற்போது புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ளது சுமார் மூன்றடி உயரமுள்ள மேடை மீது கட்டப்பட்டுள்ள இக்கோயிலில் முற்காலச் சோழர் கலைப்பாணியைக் கொண்டு விளங்கும் துர்க்கை சிற்பம் ஒன்று உள்ளது. நான்கு கரங்கள் கொண்டு விளங்கும் இச்சிற்பத்தின்

மேலிருகரங்களில் சங்கும் சக்கரமும் காணப்படுகின்றன. கீழ் வலது கரம் அபய முத்திரையில் இருக்க, இடது கரம் தொடை மீது அமர்த்தப் பட்டுள்ளது. தலையில் கரண்ட மகுடமும், காதுகளில் குண்டலங்களும், கழுத்தில் ஆரங்களும் அணி செய்கின்றன.

**கல்வெட்டு**

சிதைந்திருந்த இக்கோயிலினை அண்மையில் புதுப்பித்தபோது சுவரினுள் மறைந்திருந்த முழுக்கல்வெட்டு பத்து வரிகள் கொண்டுள்ளது. சில எழுத்துக்கள் சிதைந்துள்ளன.

1. திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவிசைய கண்டகோ
2. பாலதேவற்கு யாண்டு ரு-சாவது சிறுவாந் பேட்டு . . .
3. . . . கங்களூர் கரிப்பாய்த் தரிப்பற்று . . .
4. . . . பமேகிற் அவிலெ நுளப்பாற்று மூா . . .
5. . . . வாழ வந்தாந் கருமாணிக்கப் பெரு . . .
6. (கு) ரு மாணாய்க்கர் கைக்கொண்டு குடி கு
7. லையாதபடி நோக்குகையாலே இ
8. வர் பேரால் கருமாணிக்க நல்லூரெந்
9. று பெயரிட்டோம் இச்சிறு (வ)ாந் பேட்
10. டு ஊரொம்.

இக்கல்வெட்டு ஸ்ரீ விஜய கண்ட கோபால தேவரின் ஐந்தாம் (கி.பி. 1255) ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் இவ்வூர் சிறுவாந்பேடு என்று குறிக்கப்பட்டுள்ளது. கருமாணிக்கர் என்பவர் இவ்வூர் மாணாய்க்கராகக் (ஊர் பெருந்தனக்காரர்) கூறப்பட்டுள்ளார். இச்சிறுவாப்பேட்டு ஊராரின் குடிகுலையாதபடி காத்தபடியால் இவ்வூர் மக்கள் இவர் பெயரால் கருமாணிக்க நல்லூர் என்று ஒரு ஊருக்கு பெயரிட்டனர். நல்லூர் என்னும் ஊர் சிறுவரம்பேட்டு ஊராட்சி எல்லைக்குள் அமைந்த ஒரு சிற்றூராக தற்போதும் உள்ளது.

### பால சுப்ரமணியர் கோயில்

ஊருக்கு மேற்குப்புறத்தில் அமைந்துள்ள இக்கோயில் அண்மையில் புதுப்பிக்கப் பெற்றுள்ளது. ஏழு நிலைக்கோபுரம் வாயிலை அலங்கரிக்கிறது. கோயில் கருவறை, அர்த்த மண்டபம், அலங்கார மண்டபம், ரிஷப மண்டபம், மயில் மண்டபம் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகிறது. கல்வெட்டுகள் ஏதும் காணப்படவில்லை. கருவறையிலுள்ள இறைவன் முருகன் பல்லவர் காலத்தியக் கலைப்பாணியை ஒத்துள்ளது.

இத்தகைய தொன்மை வாய்ந்த கோயில்களுடன், திருவூரகப் பெருமாள் கோயில், வரதராஜ பெருமாள் கோயில், ஊரின் புறத்தே அமைந்துள்ள கிராம தேவதையான எல்லையம்மன் கோயில் ஆகிய கோயில்களும் உள்ளன.

## பழவேற்காடு

### அமைவு

பழவேற்காடு சென்னைக்கு வடக்கே 60 கி.மீ. தூரத்திலும் பொன்னேரியிலிருந்து 18 கி.மீ. தூரத்திலும் உள்ளது. இவ்வூர் கடற்கரை ஓரமாக அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஊராகும். பொன்னேரிக்கும் இவ்வூருக்கும் இடையில்தான் திருப்பாலீஸ்வரர் கோயில் கொண்டுள்ள திருப்பாலைவனம் உள்ளது.

இவ்வூர் ஆதிநாராயண சுவாமி கோயிலில் காணப்படும் தெலுங்குக் கல்வெட்டு ஒன்று இவ்வூரினை, பிரளயகாவேரி என்று குறிப்பிடுகிறது. மல்லப்பட்டினம் என்னும் மற்றொரு பெயரும் இவ்வூருக்கு வழங்கப்பட்டுள்ளது. கடற்கரையோரம் அமைந்திருப்பதாலும் பல்லவ அரசர்களின் மாமல்லன் என்னும் பட்டப்பெயரை ஊர் பெயரில் கொண்டிருப்பதாலும் இவ்வூர் பல்லவர்கள் காலத்தில் மாமல்லையைப் போன்று துறைமுகப்பட்டினமாக விளங்கியிருக்கலாம். கி.பி. 17-ஆம்

நூற்றாண்டு முதல் ஐரோப்பியர்கள் இவ்வூரினை புலிகாட் (Pulicut) என்று அழைத்தனர். கடற்கரை ஓரத்தில் பவளங்கள் அதிக அளவில் கிடைத்ததால் இவ்வூருக்கு பவளக்காடு என்னும் பெயரும் வழங்கி வந்துள்ளது.

தற்போது வழங்கப்பெறும் பழவேற்காடு என்னும் பெயர். இவ்வூரைச் சுற்றிலும் கருவேல மரங்கள் நிறைந்திருந்ததால் ஏற்பட்ட பெயராகும். இப்பகுதியில் வேற்காடு என்னும் பெயருடன் பல ஊர்கள் இருந்தமையால் அவற்றுள் பழமையானது என்பதாலேயே இவ்வூர் பழவேற்காடு எனப்பட்டது.

## ஆதிநாராயண சுவாமி கோயில்

இக்கோயில் ஊருக்கு நடுவே மிகவும் சிதைந்த நிலையில் காணப்படுகிறது. முன் மண்டபம், மகா மண்டபம், கல்யாண மண்டபம் ஆகியவற்றைக் கொண்டு விளங்கும் இக்கோயிற் கருவறை கிழக்கு நோக்கியுள்ளது. பங்கஜவல்லி என்று அழைக்கப்படும் தேவிக்குத் தனிக்கோயில் உள்ளது. கோயிலின் தெற்குப் பக்கச் சுவரில் காணப்படும் 16–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தெலுங்குக் கல்வெட்டு ஒன்று சிதிலமாயிருந்த பங்கஜவல்லி கோயிலைப் புதுப்பித்த செய்தியையும், கல்யாண மண்டபம் கட்டிய செய்தியையும் கூறுகிறது. பால வந்தகுலு என்பவர் இத்தர்மத்தைச் செய்தவராகக் குறிக்கப்பெறுகிறார். இக்கல்வெட்டில் இவ்வூர் பிரளய காவேரி என்றழைக்கப்படுகிறது. தற்போது இக்கோயில் இந்துசமய அறநிலையத் துறையினரால் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள இராமாயணக் காட்சிச் சிற்பங்கள் புகழ்பெற்றவை. இக்கோயில் செம்புராங்கற்களால் கட்டப்பட்டதாகும்.

## சாம ஈஸ்வரசாமி கோயில்

கோயில் கருவறை, முன்மண்டபம், மகா மண்டபம் ஆகிவற்றைக் கொண்டு விளங்குகின்றது. தேவிக்குத் தனி ஆலயம் உள்ளது. விஜயநகர காலத்திய இக்கோயில் சிற்பக்கலையழகு மிக்கது.

### மரச்சிற்பங்கள்

கோபுரத்தின் மேல்நிலையைத் தாங்கும் இரண்டு மரத்தூண்கள் வாயிலை அலங்கரிக்கின்றன. இத்தூண்களோடு சேர்த்துப் பொருத்தப் பட்டுள்ள மரச்சட்டங்களை கி.பி. 16-ஆம் நூற்றாண்டை சேர்ந்த அழகிய மரச்சிற்பங்கள் அணி செய்கின்றன. இவற்றுள் மரச்சட்டங்களின் மேற்புறம் காணப்படும் குதிரை வீரனின் மரச்சிற்பங்கள் கலையழகு மிக்கவை. தூண்களுக்கு இருபுறமும் யாளி சிற்பங்கள் உள்ளன. விஜயநகர கால மகாமண்டபங்களிலும் கல்யாண மண்டபங்களிலும் தூண்களோடு சேர்த்து வடிக்கப்பெற்ற குதிரை வீரனின் கற்சிற்பங்களைப் போன்று மிகத் தத்ரூபமாக இம்மரச் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன.

வீரன் அமர்ந்துள்ள குதிரை தன் முன்புறக் கால்களைத் தூக்கியவாறு உள்ளது. குதிரையைச் சுற்றிலும் இசைக் கலைஞர்கள் காண்பிக்கப்பட்டுள்ளனர். குதிரையின் முன்புற வலது பக்கத்தில் கடிவாளத்தை ஒரு வீரன் பிடித்துள்ளான். இடது புறத்தில் குடை பிடித்தவாறு ஒருவன் நின்றுள்ளான். குதிரையைச் சுற்றிலும் மத்தளம் வாசிப்பவன். தாளம் இசைப்பவன், குழல் ஊதுபவன் ஆகியோர் உள்ளனர். கோபுர விதானத்தின் நடுவில் விரிந்த தாமரை போன்ற அமைப்பு, மரப்பலகையில் மிக அழகுற வடிக்கப்பெற்றுள்ளது.

### கற்சிற்பங்கள்

பிரதானக் கோயிலின் முன் மண்டபத்தில் உள்ள தூண்களின் மேற்பகுதியை இணைக்கும் உத்தரத்தில் புராண கதைகளை விளக்கும் சிறிய அளவினதான கற்சிற்பங்கள் பல காணப்படுகின்றன. வலப்புறத்தில் அனுமனின் பல்வேறு தோற்றங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இடப்புறத்தில் மனுநீதி சோழன் கதையின் பல்வேறு காட்சிகள் கவினுறச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

### டச்சுக்கோட்டை

டச்சுக்காரர்கள் 1609-ல் இங்கு வந்து 1610-ல் கல்டிரியா (Geldria) என்ற கோட்டையைக் கட்டினர். சிதைந்த கட்டிடச் சுவர்ப் பகுதிகளும்,

கோட்டைச் சுவரின் அடிப்பகுதிகளும் இக்கோட்டையின் சின்னங்களாக இன்று காணப்படுகின்றன. கோட்டையைச் சுற்றி பெரிய அகழி உள்ளது. பக்கிங்ஹாம் கால்வாய் இக்கோட்டையின் கிழக்குப் பகுதியினை ஒட்டிச் செல்கிறது. கோட்டைக்குள் தண்ணீர் புகாதவாறு தடுப்பதற்குத் தடுப்புச்சுவர் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. இக்கோட்டையின் முதல் டச்சு கவர்னர் பி.இ.வான்ஹோகன் ட்ரூப் (P. E. Van Hogar dorp) என்பவராவார்.

**டச்சு இடுகாடு (Dutch Cemetry)**

இவ்வூரில் 1656-இல் தோற்றுவிக்கப்பட்ட டச்சுக்காரர்களின் இடுகாடு (Cemetry) ஒன்று காணப்படுகிறது. இங்குள்ள கல்லறைகளின் (Tombstones) காணப்படும் சிற்பங்களும் கல்வெட்டுகளும் கலையழகு மிக்கவை. இக்கல்லறைச் சிற்பங்கள் இங்கு வாழ்ந்த டச்சுக்காரர்களின் செல்வச் சிறப்பையும், அவர்கள் அணிந்த உடைகள் அணிகள் ஆகியவற்றைப் பற்றியும் நமக்குத் தெள்ளத் தெளிவாக உணர்த்துகின்றன. இவ்விடுகாட்டின் வாயில் ரோமானியப் பாணியிலமைந்த (Romanesque)வில் வட்ட வடிவில் உள்ளது. வாயில் முகப்பின் இருபுறமும் நின்ற நிலையில் இரண்டு எலும்புக்கூட்டுக் கற்சிற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் வலதுபுறம் காணப்படுவது பெண் உருவம். இடதுபுறம் காணப்படுவது ஆண் உருவம். இச்சிற்பங்கள் மிக நேர்த்தியான முறையில் வடிக்கப்பட்டுள்ளன. வலப்புறம் காணப்படும் எலும்புக்கூட்டுச் சிற்பம் வாயில் முகப்பின் மீது காணப்படும் மண்டையோட்டுச் சிற்பத்தினைத் தாங்குகிறது. இடப்புறம் காணப்படும் சிற்பம் முட்டை வடிவிலான மணல் சொரிந்து காலங்காட்டும் கருவியினைத் (Hour-glass) தலை மீது கொண்டுள்ளது. இச்சிற்பம் முட்டையின் மேலோட்டினைத் தாங்கும் ஒரு டச்சு கவர்னரைக் குறிப்பதாகச் செவிவழிச் செய்தி கூறுகிறது. கொடிய பஞ்சம் ஒன்று வந்த காலத்தில் இக்கவர்னர் மக்களுக்கு முட்டையோட்டில் அரிசி அளந்து கொடுத்ததை இச்சிற்பம் குறிப்பதாகக் கூறப்படுகிறது.

இங்குள்ள கல்லறைகளின் மீது காணப்படும் சிற்பங்கள் 17-ஆம் நூற்றாண்டில் இவ்வூர் இருந்த நிலையையும், கல்வெட்டுகள் இங்கு வாழ்ந்த மக்களைப் பற்றியும் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

ஐயோன்னஸ் வெர்கர்க் (Loannes Verkerk) என்பாரின் கல்லறை மீது காணப்படும் ஒரு சிற்பம் இவ்வூரிலுள்ள மாதாகோயிலைக் குறிப்பதாக உள்ளது. இச்சிற்பத்தில் மாதாகோயில் மரங்கள் சூழ்ந்து காணப்படுகிறது. கோயிலுக்கு முன்னால் பாதிரியார் ஒருவர் முழங்காலிட்டு வணங்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளார்.

ஆப்பிரகாம் மெனோஸ் (Abraham Menoies) என்பவரின் கல்லறை மீது காணப்படும் சிற்பம் 1684-ஆம் ஆண்டில் இவ்வூரிலிருந்த டச்சுக்கோட்டையைக் காட்டுகிறது. நீர் நிறைந்த அகழியின் நடுவில் கல்டிரியா கோட்டை உள்ளது. அகழியில் தாமரை மலர்களும் மீன்களும் நிறைந்து காணப்படுகின்றன. கோட்டையின் மேல் மாடத்தில் டச்சுக்காரர்கள் தம் பெண்களோடு நின்றிருக்கும் காட்சி போற்றத்தகுந்த அழகு மிக்கது. கோட்டையின் அருகாமையில் சுற்றுச் சுவர்களில்லாத நகர மக்களின் இல்லங்கள் காணப்படுகின்றன. பழவேற்காட்டிற்கு மேற்கே 40 கி.மீ. தூரத்திலுள்ள ஊத்துக்கோட்டை என்னும் ஊரில் கோட்டை ஒன்று இருந்ததைப் பற்றி இக்கல்லறைக் கல்வெட்டு குறிக்கிறது.

சார்லஸ் டிலோன் (Charles Delon) என்பவரின் கல்லறை இங்கு உள்ளது. கல்வெட்டில் இப்பெரியார் 1800-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14-ஆம் நாள் தமது 72-ஆவது வயதில் இவ்வூரில் இறந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது. இப்பெரியார்தான் முதன்முதலில் 1728-இல் சென்னையில் அச்சுக்கலையை அறிமுகப்படுத்தினார். அவர் சென்னைக்கு வருமுன்னர் பாண்டிச்சேரியில் ஓர் அச்சுக்கூடத்தை நிறுவி நடத்தி வந்தார்.

இது போன்று பல முக்கிய வரலாற்றுச் செய்திகளை தன்னகத்தே கொண்டு விளங்கும் இக்கல்லறை இந்தியத் தொல்லியல் துறையினரால் பாதுகாக்கப்பட்டு வரப்படுகிறது.

### மாதா கோயில்

பழவேற்காட்டிற்கு வடக்கே கோட்டை குப்பம் பகுதியில் கத்தோலிக்க கிருஸ்துவ மாதாகோயில் ஒன்று உள்ளது. இம்மாதா கோயில் 1614-ஆம் ஆண்டு ஹாலந்து நாட்டைச் சேர்ந்த பீட்டர்பால் ப்ளாக்கர்மென் (Peter Paul Falgrman) என்னும் பாதிரியாரின் மேற்பார்வையில் கட்டப்பட்டதாகும். ஏப்ரல் மாதத்தில் இக்கோயிலுக்கு விழா நடைபெறுகிறது. கிறித்தவர் அல்லாத மக்களும் இவ்விழாவில் பெருமளவில் கலந்துக் கொள்கின்றனர். இம்மாதாகோயில் 1678-ஆம் ஆண்டு இருந்த தோற்றத்தை இவ்வூரிலுள்ள கல்லறைச் சிற்பம் ஒன்று காட்டுகிறது. தற்போது இம்மாதகோயில் புதுப்பிக்கப்பட்டு புதிதாகக் கட்டப்பட்டுள்ளது.

### நிழற் கடிகாரம்

ஊரின் தெற்குப்புறத்தே அமைந்துள்ள மசூதியின் முன்னுள்ள திறந்தவெளியில் நிழற்கடிகாரம் ஒன்று உள்ளது. சூரிய வெளிச்சத்தின் நிழலைக் கொண்டு காலத்தை மிகத்துல்லியமாகக் காட்டும் இக்கடிகாரத்தின் அமைப்பு வியத்தகு முறையில் உள்ளது. ஓர் உயர்ந்த பீடத்தின் மீது கால எண்களைக் குறிக்கும் இரும்புத் தகடு ஒன்று கிழக்கு மேற்காகப் பதிக்கப்பட்டு, அதன் நடுவில் சுமார் 3 செ.மீ. உயரமும் 1.5 செ.மீ. அகலமுள்ள நீள்சதுர வடிவிலான இரும்புத் துண்டு ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. சூரியனின் வெளிச்சம் இரும்புத் துண்டின் மீது விழும்போது, அவ்விரும்புத் துண்டின் நிழல் எண்கள் குறிக்கப்பட்டுள்ள இரும்புத் தகட்டின் மீது விழும். எந்த எண் மீது நிழல் விழுகிறதோ அதுவே அப்போதைய நேரம் என்று எளிதில் அறிந்து கொள்ளலாம்.

### தோணி ரேவு

இது பழவேற்காட்டிற்கு அருகேயுள்ள ஒரு தீவாகும். இத்தீவுக்கும் பழவேற்காட்டுக்கும் இடையே செல்லும் பக்கிங்ஹாம் கால்வாய் வழியாக எண்ணூரிலிருந்து பழவேற்காட்டிற்கு படகில் செல்லாம். மூன்று பக்கம் கடலும் நான்காவது பக்கம் கால்வாயும் சூழ அமைந்த இத்தீவில் பழமையான கலங்கரைவிளக்கு ஒன்று இருக்கிறது. இங்கு மீனவர்களும்

முகமதியர்களும் அதிகமாக வாழ்கின்றனர். டச்சுக்காரர்கள் காலத்தில் இத்தீவிலிருந்துதான் கைத்தறித் துணிகள் மலேசியா போன்ற கிழக்காசிய நாடுகளுக்குப் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டது. இன்றும் இத்தீவில் கைத்தறிநெசவு, பனை ஓலைப் பொருட்கள் செய்தல் போன்ற தொழில்கள் நடைபெற்று வருகின்றன.

### கரி மணல்

இது பழவேற்காட்டுத் தீவிலுள்ள கடற்கரைச் சிற்றூர். கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் கப்பல்களில் வந்த ஐரோப்பியர்களுக்குக் கடல் கடந்த நிலைப்பகுதியில் தெரிந்த முதல் ஊர் இதுவே. வெள்ளையராட்சி காலத்தில். சென்னை மாநகரில் சிறந்து விளங்கிய ஐரோப்பிய வணிகர் பலர் வேனிற் காலத்தில் இவ்வூரில் தங்கி வந்தனர்.

சோனர்களுடைய மசூதிகள் (பெரியபள்ளி, சின்னப்பள்ளி, ஹாஜிபள்ளி) தொன்மை வாய்ந்தவைகளாகும். சென்னை அரசு கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகத்தில் உள்ள கைபீது இவ்வூரின் வரலாற்றை விவரிக்கின்றன.

## திருப்பாலைவனம்

### அமைவு

திருப்பாலைவனம் சென்னையிலிருந்து பொன்னேரி வழியாகவும், காட்டூர் வழியாகவும் பழவேற்காடு செல்லும் பாதையில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சிற்றூராகும். இவ்வூர் பொன்னேரியிலிருந்து சுமார் 12 கி.மீ. தூரத்தில் உள்ளது.

### கோயில்கள்

திருப்பாலைவனத்தில் தற்போது காணப்படுகின்ற பழமை யானதும் பெரியதானதும் மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததுமாகிய ஒரே சிவன் கோயில் திருப்பாலீஸ்வரர் கோயிலாகும். இதனைத் தவிர மேலும் இரண்டு பிடாரிக் கோயில்களும், ஓர் ஈஸ்வரன் கோயிலும், சிதைந்த நிலையிலுள்ள ஒரு பெருமாள் கோயிலும் உள்ளன.

## திருப்பாலீஸ்வரர் கோயில்

இக்கோயிற் கல்வெட்டுகளில் திரிபுவனச் சக்கரவர்த்திகள் வீரராசேந்திர சோழ தேவர் என்று வழங்கப்பட்ட மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சோழவடுகன் என்பவனது மேற்பார்வையில் கட்டப்பட்டுள்ள கோயில் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. இக்கோயில் நீள்சதுர வடிவில் காணப்படுகிறது. கோயிலில் அம்மனுக்கும், நடராஜருக்கும் தனித்தனிச் சன்னதிகள் உள்ளன. இறைவனுக்கும், அம்மனுக்கும் இடையில் முருகன் சன்னதி உள்ளது. இக்கோயிலில் சுவாமிக்கு வலப்புறத்தில் அம்மன் சன்னதி அமைந்திருப்பது ஒரு தனிச் சிறப்பாகும்.

கிழக்கு நோக்கி அமைந்துள்ள ஈஸ்வரர் சன்னதி அர்த்த மண்டபம் முக மண்டபம், முன் மண்டபம் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகிறது. முகமண்டபத்தில் பக்கத்திற்கு இரண்டாக நான்கு முழுத்தூண்கள் உள்ளன. சோழர் காலத்தைச் சேர்ந்தவை. கருவறையின் நுழைவாயிலில் விநாயகரும் தட்சிணாமூர்த்தியும் உள்ளனர். முகமண்டபத்தின் வெளிச்சுவரில் தென்புறமும் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு தேவகோட்டங்கள் உள்ளன. ஆனால் அவற்றில் சிற்பங்கள் இல்லை. கருவறையின் பின்புறம் கஜபிருஷ்டமாக அமைந்துள்ளது. விமானமும் தூங்கானை மாடவடியில் உள்ளன. அர்த்த மண்டபத்தின் வெளிப்புறத்தில் சிற்பங்களுடன் கூடிய ஐந்து தேவகோட்டங்கள் உள்ளன. கருவறையின் முன் அமைந்திருப்பது நடராஜர் மண்டபம்.

"காளயுக்தி வருடம் மேஷ பகுள திருவாளர் இராமநமோ மண்டலேஸ்வர மந்திர மீசா குண்டர உரி ஹற்பரோர் ஓபுள ராஜய்யா மகன் ரெட்டிராஜா கட்டிய மண்டபம்"

என்பது இம்மண்டபத் தூணில் காணப்படுகின்ற தெலுங்குக் 'கல்வெட்டு ஒன்றின் தமிழாக்கமாகும். எனவே ஓபுள ராஜய்யா என்பவரின் மகனான ரெட்டி ராஜா என்பவனால் இம்மண்டபம் கட்டப்பட்டது என்று தெரிய வருகிறது.

கோயிலில் உள்ள மற்றொரு கல்வெட்டு இக்கோயிலின் மஹா மண்டபமும், கோயிலின் படிகளும் பையூர்க்கோட்டத்தைச் சார்ந்த ஆமூரில் உள்ள ஒருவரால் கொடையாக அளிக்கப்பட்டவை' என்ற செய்தியைத் தருகின்றது. மஹாமண்டபத்தைக் கல்யாண மண்டபம் என்றும் அழைக்கின்றனர். விஜயநகர காலத்தைச் சேர்ந்தது.

ஈஸ்வரர் சந்நிதிக்கு வலதுபுறம் அமைந்துள்ள அம்மன் சந்நிதி மூன்றாம் இராஜராஜனால் கட்டப்பட்டு, சம்புவராய அரசன் இராசநாராயண சம்புவராயனின் காலத்தில் பழுது பார்க்கப்பட்டது .

இக்கோயிலின் தலவிருட்சமான பாலைமரம் தென்மேற்கு மூலையில் காணப்படுகின்றது.

## கல்வெட்டுச் செய்திகள்

### அரசர்கள்

சோழ மன்னர்களான முதல் குலோத்துங்கன், விக்கிரமச் சோழன், இரண்டாம் குலோத்தங்கன், இரண்டாம் இராஜராஜன், இரண்டாம் இராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராஜராஜன், தெலுங்குச் சோழர்களான தம்முசித்தி திருக்காளத்தி தேவகண்ட கோபாலன், இராசராச கண்டகோபாலதேவன், விஜயகண்ட கோபாலன், பாண்டிய மன்னனான முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன், சம்புவராய மன்னனான மஹாமண்டலேஜ்வர பிரதாபருத்ர தேவர்; விசயநகர காலத்தைச் சேர்ந்த புக்கர், குமார வீரசாயன உடையார் போன்ற மன்னர்கள் காலக் கல்வெட்டுகளும், நாயக்கர் காலத்தைச் சார்ந்ததாகக் காணப்படும் பெயர் குறிப்பிடாத சில கல்வெட்டுகளும் இக்கோயிலில் காணப்படுகின்றன. மேலும் இம்மன்னர்கள் காலத்தைச் சார்ந்த பல்வேறு மக்களின் பெயர்களும் இக்கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளன.

### நந்தவனங்கள்

திருப்பாலைவனம் கோயிலுக்குச் சொந்தமான நந்தவனங்கள் மூன்று இருந்தன என்று கல்வெட்டுகள் மூலம் தெரியவருகின்றன.

1. ஆலால சுந்தரன் திருநந்தவனம். இது முதல் குலோத்துங்கன் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது.

2. பக்தர் சித்தத்துறைவான் திருநந்தவனம். இது மூன்றாம் இராஜராஜன் காலத்திலோ அல்லது அதற்கு முன்னரோ ஏற்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

3. ஐம்பத்தேழுவர் திருநந்தவனம். இது விஜயநகர் காலத்தைச் சேர்ந்தது. காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு.

இவை தவிர மேலும் நான்கு கல்வெட்டுகள் நந்தவனங்களுக்குக் கொடை அளித்தோரைப் பற்றிக் கூறுகின்றன. அவற்றுள் இரண்டு, மூன்றாம் குலோத்துங்கன் காலத்தையும், ஒன்று மூன்றாம் இராஜராஜன் காலத்தையும் ஒன்று விஜய நகர மன்னரான புக்கராயர் காலத்தையும் சார்ந்தது. மற்றொரு கல்வெட்டில் மன்னன் பெயர் குறிப்பிடப்படவில்லை.

### மடங்கள்

கல்வெட்டுகள் மூன்று மடங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன விக்கிரம சோழன் காலக் கல்வெட்டிலும், மூன்றாம் இராஜராஜன் காலக் கல்வெட்டிலும், மடங்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

> ''ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து கோளூர் நிலை திருப்பாற்றுறை திருப்பாலைவன முடையாற் கோயில் தன்மதாவளன் திருமடம்''

என்று விக்கிரம சோழனின் 14-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு குறிப்பிடுகிறது.

> ''பையூர்க் கோட்டத்துத் திருப்பாலைவனத்து அவிமுத்தீஸ் வரத்துக்கு வடக்கிற் கண்ட கோபால மாணிக்கத்தின் மடம்''

என்று மூன்றாம் இராஜராஜனின் கல்வெட்டு கூறுகிறது.

மேலும் இதே மன்னனின் 7-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் **'அன்பர்க்கடியான் மடம்'** என்று ஒரு மடம் இடம் பெற்றுள்ளது.

கண்டகோபால மாணிக்கமடம் அடியார்களை உண்பித்தலும் நந்தவனத்தைப் பாதுகாத்தலும் ஆகிய செயல்களை மேற்கொண்டது. அன்பர்க்கடியான் மடத்தில் ஆண்டார்கள் இருந்தனர். அவர்கள் கோயிலில் இருந்த திருக்கோட்டி மண்டபத்தை மேற்பார்த்தனர். திருமுறை ஓதினர். பத்தர் சித்தத்து உறைவான் திருநந்தவனத்தை வளர்த்தனர்.

### பழங்காசுகள்

பழங்காசு, புஜபவன் மாடை, கண்ட கோபாலன் மாலை என்ற பெயர்கள் கொண்ட மூவகைக் காசுகள் கல்வெட்டுகளில் சொல்லப் பட்டுள்ளன. பழங்காசும், புஜபலன் மாடையும் இரண்டாம் இராஜராஜன் காலத்திலும் தெலுங்கு சோழர்களான திருக்காளத்தி தேவ கண்ட கோபாலன், விஜய கண்ட கோபாலன் ஆகியோர் காலத்தில் 'கண்ட கோபாலன் மாடை'யும் வழக்கத்தில் இருந்திருக்கின்றன.

### விழாக்கள்

அக்காலத்தில் பல்வகை விழாக்கள் இக்கோயிலில் கொண்டாடப்பட்டதற்கா ன சான்றுகள் கல்வெட்டுகளில் உள்ளன. அவை வருமாறு: திருவாதிரை விழா, ஆருத்ரா விழா, உத்தராயன சம்க்ரந்தி ஆகியவை. திருவாதிரை விழாவும், ஆருத்ரா என்ற விழாவும் மார்கழி மாதத்தில் கொண்டாடப்பட்டன. தற்போது திருவாதிரை விழா இக்கோயிலில் கொண்டாடப்படுகின்றது.

### நிலங்கள்

இக்காலத்தில் நிலங்களுக்குப் பல்வகைப் பெயர்கள் இருப்பது போன்று, அக்காலத்திலும் நிலங்கள் பல்வகைப் பெயர்களால் அழைக்கப்பட்டன. 'ஆலால சுந்தர விளாகம்' என்று ஒரு நிலத்தின் பெயர் கல்வெட்டில் குறிக்கப்படுகின்றது.

## அளவை முறைகள்

பல்வேறு அளவை முறைகள் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன. நிலங்கள் அமைப்பதற்கு இருவகை அளவை முறைகள் பயன்படுத்தப் பட்டன. 1. வாழ வந்தான் கோல். 2. கண்டரகண்டன் கோல். மூன்றாம் இராஜராஜனின் கீழ் இருந்த ஓர் சிற்றரசனின் ஆட்சியின் போது வாழ வந்தான் கோலும், வீரஸாயன உடையார் என்ற விஜய நகர மன்னன் காலத்தில் கண்டர கண்டன் கோலும் பயன்படுத்தப்பட்டன. மேலும் விக்கிரம சோழன் காலத்தில் 'பதினாறு சாண் கோல்' என்ற ஒன்று பயன்படுத்தப்பட்டதாக இம்மன்னனின் 14-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. மேலும் நிலங்களை விற்கும் போது 'வேலி' கணக்காகவும் 'குழி' கணக்காகவும் விற்றனர்.

## சிற்பங்களும் செப்புத் திருமேனிகளும்

இக்கோயிலில் காணப்படுகின்ற சிற்பங்களும் செப்புத் திருமேனிகளும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டிலிருந்து (சோழர் காலத்திலிருந்து) தற்காலம் வரையிலான காலத்தைச் சேர்ந்தனவாக உள்ளன. சிற்பங்களின் எண்ணிக்கை 19, செப்புத் திருமேனிகளின் எண்ணிக்கை 10.

## நாட்டுப் பிரிவுகள்

இக்கோயில் கல்வெட்டுகளில் பல மண்டலங்கள், கோட்டங்கள், நாடுகள், ஊர்கள் ஆகியவற்றின் பெயர்கள் சொல்லப்பட்டுள்ளன.

### மண்டலங்கள்

1. ஜயங்கொண்ட சோழமண்டலம்
2. சோழமண்டலம்

### கோட்டங்கள்

1. பைய்யூர்க் கோட்டம்
2. புலியூர் கோட்டம்

3. ஊற்றுக் காட்டூர்க் கோட்டம்

4. புழற் கோட்டம்

5. இக்காட்டுக் கோட்டம்

6. செங்காட்டுக் கோட்டம்

**வளநாடுகள்**

1. ராஜராஜ வளநாடு
2. விக்கிரம சோழ வளநாடு
3. நித்த விநோத வளநாடு
4. தென்துறை நித்த விநோத வளநாடு
5. மெய்குன்ற வளநாடு
6. குலோத்துங்க சோழ வளநாடு

**நாடுகள்**

1. பைய்யூர் நாடு
2. குன்றத்தூர் நாடு
3. திருமுனைப்பாடி நாடு
4. நடுவு நாடு
5. குன்ற நாடு
6. நாயுற்று நாடு
7. பேரூர் நாடு
8. காக்கலூர் நாடு
9. திருநறையூர் நாடு

**சதுர்வேதி மங்கலங்கள்**

1. சத்ரு பயங்கர சதுர்வேதிமங்கலம்
2. குஞ்சரமல்ல சதுர்வேதிமங்கலம்
3. கேரளாந்தக சதுர்வேதிமங்கலம்
4. விக்கிரம சோழ சதுர்வேதிமங்கலம்

**கூற்றம்**

1. ஆவூர்க் கூற்றம்

**ஊர்கள்**

1. சாத்தூர்
2. அரமூர்
3. குன்றத்தூர்
4. திருவான்மியூர்
5. கோளூர்
6. இரையூர்
7. வயலூர்
8. பேளூர்
9. அதுங்கவூர்
10. நெல்லூர்
11. குலோத்துங்க சோழன் பைய்யூர்
12. மெதுவூர்
13. ஆவூர்
14. ஆமூர்
15. எயினூர்
16. திருப்பாச்சூர்
17. உறனூர்
18. அளிநல்லூர்
19. பெருங்கறும்பூர்
20. ஈஞ்சூர்
21. ஆலத்தூர்
22. விருதுராஜ பயங்கர நல்லூர்
23. நரையூர்

**கிராமங்கள்**

1. இந்தம்பேடு
2. பனங்குடி
3. திருப்பாலைவனம்
4. பூவரம்பி
5. நடுவில்லை
6. மென் முதலை மேடு
7. புதுவாயில்
8. பெரும்பேடு
9. பொன்னம்பாக்கம்
10. பிரளயம்பாக்கம்

**தெருக்கள்**

1. பெரிய தெரு
2. பிரிதி மாணிக்க பெருந் தெருவு

இவ்வாறு பலவகையான சிறப்புடன் இக்கோயில் அமைந்துள்ளது.

## திருநின்றவூர்

காஞ்சிபுரத்தில் பல்லவ மன்னன் இராசிம்மன் கையிலாசநாதர் கோயிலைக் கட்டியுள்ளான். இது அக்காலத்தியக் கட்டடக் கலைக்கும் சிற்பக் கலைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இராஜசிம்மன்

காஞ்சியின் இந்த அழகான கோயிலைக் கட்டிக் கொண்டிருந்தபொழுது பூசலார் என்ற ஒரு சிவபக்தர் ஒரு சிவன் கோயிலைக் காஞ்சிக்கு அருகில் இருக்கும் தான் பிறந்த திருநின்ற ஊரில் கட்டினார். சேக்கிழார் வெகு அழகாக அதனை,

அடி முதல் உபானம் ஆதி
ஆகிய படிகள் எல்லாம்
வடிவுறு தொழில்கள் முற்ற
மனதினால் வகுத்துமான
முடிவுறு சிகரம் தானும்
முன்னிய முழத்திற் கொண்டு
நெடிது நாள் கூடக் கோவில்
திறம்படி நினைவால் செய்தார்

என்று கூறுகிறார்.

பூசலார் பக்தியால் மானசீகமாகவே குளக்கரையில் அமர்ந்து கொண்டு தியானித்தவாரே கோயிலைக் கட்டினர்.

"காடவர் கோமான் கச்சிக்
கற்றளி எடுத்து முற்ற
மாடெல்லாம் சிவனுக்காகப்
பெருஞ்செல்வம் வகுத்தல் செய்வான்
நாடமா லறியா தாரைத்
தாபிக்கும் அன்னாள் முன்னாள்
ஏடலார் கொன்றை வேய்ந்தார்
இரவிடை கனவில் எய்தி "

இக்கோயில் கட்டி முடிக்கப்பட்டவுடன் பூசலாரும் அரசனும் ஒரே நாளில் கும்பாபிஷேகம் வைத்துக் கொண்டதால் சிவபெருமான் அரசன் கனவில் தோன்றி நின்ற ஊர் பூசல் அன்பன் நெடிது நாள் நினைவில் செய்த, நன்று நீடாலயது நாளை நாம் புகுவோம். நீ இங்கு ஒன்றிய செய்தல் நாளை ஒழித்த பின் கொள்வாய் என்று சொன்னார். உண்மை

நிலைமை அறிய விரும்பிய அரசன் திருநின்றவூர் சென்றார். அங்கு கோயில் ஏதுமில்லாது கண்டு திகைத்து நின்றபோது, பூசலார் என்ற பக்தர் மனதிலேயே கோயில் கட்டி குடமுழுக்குச் செய்த விவரம் அறிந்தான். அடியவறைக் கண்டு வணங்கிச் சென்றான்.

பிறகு சேக்கிழார்,

"நீண்ட சேஞ்சடையனார்க்கு
நினைப்பினால் கோயிலாக்கிப்
பூண்ட அன்பிடை யறாத
பூசலார் பொற்றான் போற்றி"

என்று பூசலார் கதையை முடிக்கிறார்.

இக்கோயில் எப்போது யாரால் கட்டப்பட்டது என்பது அறிய முடியவில்லை. கி.பி. 1905–ல் தேவகோட்டை சீதை ஆச்சி இக்கோயிலில் திருப்பணி செய்திருக்கிறார்கள்.

சுவாமியின் பெயர் ஹிருதயாலயேஸ்வரர். அம்பாளின் பெயர் மரகதாம்பிகை. கருவறையில் லிங்கத்திற்கு அருகிலேயே பூசலாரின் சிலையும் செப்பு விக்கிரகம் ஹிருதயத்தின் அருகில் லிங்கத்துடன் அமைக்கப்பட்டிருக்கிறது.

இக்கோயிலுக்கு அருகிலேயே திருமங்கையாழ்வாரால் போற்றப்பட்ட பக்தவத்ஸலர் கோயில் உள்ளது. இப்பெருமாளைப் பாராவிப் பெருமாள் என அழகான தமிழ்ப் பெயரால் அழைக்கிறார்கள். அம்பாள் பெயர் என்னைப் பெற்ற தாயார். அதை வடமொழியில் ஸ்ரீமத்ஸவித்ரி நாயகி எனக் கூறுகிறார்கள். லக்ஷ்மி தேவியானவள் பூவுலகிற்கு வரும்போது ஸ்திரமாக இங்கு தங்கிவிட்டபடியால் இதற்குத் திருநின்றவூர் எனப் பெயர் ஏற்பட்டது. திருமங்கையாழ்வார் கண்ணமங்கை பாசுரத்தில் நின்றவூர் நின்ற நித்திலத்தொனை என்று பாடுகிறார். இங்கு பெருமாள் நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றார்.

இவ்வூரில் வசித்த காளத்திவாணர்மேல் ஒரு புலவர்,

"தீளத் திரிந்து உழல்கின்றாய்
நீங்கா நிழல் போல
நாளைக்கு இருப்பாயோ?
நல்குரவே-காளத்தி
நின்றைக்கே சென்றக்கால்
நீ எங்கே? நான் எங்கே?
இன்றைக்கே சற்றே இரு"

பாடியுள்ளார்.

இவ்வூரில் சைவ, வைணவ சமயங்கள் சிறப்புற்றிருந்துள்ளன.

இடம் : திருவள்ளூர் வட்டம் திருநின்றவூரில் உள்ள பக்தவத்சலப் பெருமாள் கோயில் ஆண்டாள் சன்னதி திருச்சுற்றறுக் கூரையிலும். தேர்முட்டியிலும் உள்ள கற்கள். முன்பு தூண்களாக இருந்தவை. இரண்டு துண்டுக் கல்வெட்டு களுக்கும் தொடர்புள்ளது.

காலம் : கி.பி. 10–ஆம் நூற்றாண்டு.

செய்தி: தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் அறியப்பட்டு சிலவாண்டுகளுக்கு முன் நாளிதழ்களில் செய்தியாக வெளியிடப்பட்டது. சபை நடவடிக்கைகளைக் குறிப்பிடும் மானூர், உத்திரமேரூர் கல்வெட்டுகள் போன்ற தொரு சிறப்புடைய கல்வெட்டு. மன்னன் பெயர் கிடைக்க வில்லை. மன்றாடுபவர்களுக்கு ஒரு சபையும், வாரியம் செய்பவர்களுக்கு ஒரு மஹா சபையும் இருந்திருக்கின்றன. இவைகளுக்குத் தகுதியுடையாரின் (ஒத்தாரையே) பெயரை ஓலையில் எழுதி குடத்தில் இட்டு தேர்வு செய்யும் முறை தீர்மானிக்கப்பட்டதை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. ஐந்தாண்டு பணி செய்தவர்களுக்கு மீண்டும் வாய்ப்பில்லை.

ஓராண்டு பணி செய்தால், இரண்டாண்டு இடைவெளி விட்டுத்தான் மீண்டும் பணிசெய்ய வேண்டும். முன்னர் பணிசெய்தவர், தந்தை மக்கள் யாவரும் இந்த இரண்டாண்டு இடைவெளியில் பணி செய்யக்கூடாது என்று கூறுகிறது. இத்தீர்மானம் செப்பேட்டிலும் எழுதப்பட்டிருக்கிறது.

ஆண்டாள் கோயில் திருச்சுற்றுக் கூரையில் உள்ள தூண்கல்

1. மஹாஸபை யோ
2. மும் யாண்டு இ
3. ருபத்து மூன்றா
4. வது கும்ப நாயறு
5. முதல் மன்றாடுகி
6. ன்ற ஸபை யோமு
7. ம் ஏரிவாரியப் பெ
8. ருமக்களுந் தோட்ட வா
9. ரியப் பெருமக்களும்
10. ஹட்டப் பெருமக்களும்
11. வசிஷ்டப் பெருமக்களு
12. ம் உள்ளிட்ட மஹாஸ
13. பையோம் இந்நாள்ளா
14. ல் எம்மூர்ப் பேரம்ப
15. லத்தேய் ஸபால
16. வ்ருஷீயி குறைவறக் கூ
17. டியிலிருந்து நம்மூர்க்கு
18. வீராமாஹிதார்த்ம மாக
19. ச் செய்த வ்யவஸ்யெ
20. யாவது இவ்வாண்டு
21. முதல் மன்றாட்டும்
22. வாரியங்களும் எ

23. முதும் பொழுது ம
24. ஹா ஸபை குறைவற
25. வ்ரஹ்மஸ்யா நத்தே கூ
26. டியிருந்து மஹாஸ
27. பைக்கு ஒத்தாரை
28. யே அற்றைக்குண்டா
29. ன ஐய்யாட்டை
30. நாள் மன்றாடியு
31. ம் வாரியஞ் செய்

தேர்முட்டியில் கிடக்கும் கல்

32. ய்யாதாரையே ம
33. ன்றாட்டும் வாய்மு
34. ம் இடுவதாகவும்
35. வாரியமெழுது
36. மாண்டின் முன் இ
37. ரண்டாண்டு வாரி
38. யஞ் செய்தாருக்கும் உ
39. டப் பிறந்தாருந் தமப்
40. பனும் மக்களும் ஒ
41. ழிய பேர் எழுதுவ
42. தாகவும் இப்பரி
43. க எழுதப்பட்டாரை மஹா
44. ஸபை நடுவேயிருந்தே கு
45. டிமை ஏல்பாராகவும்
46. இப்பாசன்றிக் குடிமை
47. என்றார் ஊருக்குப் பிழை
48. த் தாராகவும்
49. குன்றியே கொள்வா ராகவு
50. மன்றாடியும் வாரியஞ்செ

51. ய்துவிட்டார்கள் புக்க ஸஙெஹ
52. யார்க்கு கணக்குக் காட்டி ஒட்பி
53. த்து வயவஸ்ஙெெ செய்தோம் ம
54. ஹாஸஙெஹயோம் இவ்யவ
55. ஸ்ஙெயில் (பிழைத்)தாரை நம்
56. மூர் ச்ராவ(ணை) ஹாமிகரை
57. வேண்டிநான் யர்ம்மா ஸநத்
58. து நிசதி இருபத்தைஞ் கழ
59. ஞ்சு பொன் ஒண்ஜமிடப் பெ
60. றுவாராகவும் இவ்யவஸ்ஙெெ
61. செப்பேட்டில் வெட்டி
62. . . .

## விளக்கணாம் பூண்டி

சென்னையிலிருந்து 120 கி.மீட்டரும், திருத்தணியிலிருந்து சோளிங்கர் செல்லும் வழியில் ஆர்கேபேட்டையில் 90 கி.மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது. இக்கோயில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்டு வரப்படும் சின்னமாகும்.

முற்காலச் சோழர்களின் கலைப் பாணியில் அமைந்துள்ளதாகும். கோயில் இறைவன் விசாலீஸ்வரர் எனப்படுவதால் கோயிலும் விசாலீஸ்வரர் கோயில் என அழைக்கப்படுகின்றது. கருவறை தேவகோட்டங்களில் தெற்கில் தட்சிணாமூர்த்தியும், பிரம்மா மற்றும் துர்க்கை வடக்கிலும் காணப்படுகின்றனர். கருவறை முன்மண்டபத்தில் சோழர் காலத்திய விநாயகர், சப்தமாதர்கள் ஜேஷ்டாதேவி சிற்பங்களும் உள்ளன. கோயிலின் நுழைவாயிலின் முன்புறம் இரண்டு வீரர்கள் தங்கள் தலையை தாங்களே அரிந்து கொள்ளும் நவகண்ட சிற்பங்கள் உள்ளன. கோயிலின் முன்புறம் சோழர் காலத்திய கல்வெட்டு மிகவும் சிதிலமடைந்து காணப்படுகிறது. தற்போது இக்கோயில் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வரப்படுகின்றது.

## திருவாலங்காடு

### அமைவிடம்

திருத்தணிகை வட்டத்தில் சென்னையிலிருந்து 58 கி.மீ. தொலைவில் சென்னை - அரக்கோணம் மார்க்கத்தில் உள்ளது.

திருவாலங்காடு என்பது திரு+ஆலங்காடு அதாவது ஆலமரங்கள் நிறைந்த ஊர் ஆதலால் திருவாலங்காடு ஆகியது.

இத்திருத்தலத்தினைப் பற்றி காரைக்கால் அம்மையாரின் திருப்பதிகம், திருஇரட்டை மணிமாலை, மூலர் அருளிய தேவராப் பதிகங்கள் ஆகிய இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மேலும் கந்த புராணம், திருமந்திரம், திருவிளையாடற்புராணம். பொன்வண்ணத் தந்தாதி, திருக்கயிலாய ஞானஉலா, கோயில் நான்மணிமாலை, திருத்தொண்டர் திருவந்தாதி, பெரியபுராணம், திருப்புகழ் ஆகிய இலக்கியங்களிலும் பல செய்திகள் காணப்படுகின்றன.

கல்வெட்டுகளும், செப்பேடுகளும் இவ்வூரின் வரலாற்றை அறிய துணைபுரிகின்றன. திருவாலங்காடு செப்பேடுகள் முதலாம் இராஜேந்திர சோழனின் செப்பேடாகும். 1903-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட இது முப்பத்தோரு ஏடுகளைக் கொண்டது. இக்கோயிலில் 60க்கும் மேற்பட்டக் கல்வெட்டுகள் உள்ளன. கல்வெட்டுகளில் பழையனூர் திருவலங்காடு என்றே குறிக்கப்படுகின்றன. இவ்வூரில் வடாரண்ய ஈஸ்வரர் கோயிலும், பழையனூரில் உள்ள கைலாசநாதர் கோயிலும், தழுவிக் குழைந்த ஈஸ்வரர் ஆலயம், தீப்பாய்ந்தார் கோயிலும் உள்ளன.

பல்லவ மன்னன் நிருபதுங்க வர்மனின் கல்வெட்டும், சோழ மன்னன் முதலாம் இராஜேந்திர சோழர், முதலாம் இராஜாதிராஜன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரம சோழன், இரண்டாம் இராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராஜராஜன் ஆகியோரின் கல்வெட்டுகளும் உள்ளன. தெலுங்கு சோழ மன்னர்கன் விஜயகண்ட கோபாலன், விஜயநகர அரசன், இரண்டாம் தேவராயன்,

மல்லிகார்ஜுன் தேவர், கிருஷ்ணதேவராயர் சதாசிவராயர் ஆகியோரின் கல்வெட்டுகளும் இவ்வூரில் உள்ளன.

இக்கோயிலில் இறைவன் பெயர் திருஆலங்காட்டு மகாதேவர் என்றும், இறைவி வண்டார்குழலி என்றும் அழைக்கப்படுகின்றனர்.

திருஆலங்காடு, நடராஜர் திருநடனமாடும் இரத்தினச் சபையாகத் திகழ்கின்றன. மற்ற நான்கு சபைகள்

1. சித்திர சபை - குற்றாலம்
2. தாமிர சபை - திருநெல்வேலி
3. வெள்ளியம்பலம் - மதுரை
4. கனகசபை - சிதம்பரம் ஆகியவைகளாகும்.

பழையனூர் என்ற ஊர் நீலி என்ற பெண் பேய் குறித்து இலக்கியங்களில் பல செய்திகள் காணப்படுகின்றன.

## காரைக்கால் அம்மையாரும் திருவாலங்காடும்

புனிதவதியார் என்று வழங்கப்பட்ட காரைக்கால் அம்மையார், திருக்கயிலாய மலையை நோக்கிச் சென்றார். அங்கு சிவபெருமான் திருவாலங்காடு சென்று தன்னை வழிபாடு பணித்ததால், இங்கேயேத் தங்கி இறைவனின் திருநடனத்தைக் கண்டு ஆனந்தித்து வருகின்றார்.

## திருவெற்றியூர்

சென்னையின் ஒரு பகுதியாகத் திகழும் திருவெற்றியூர். திரு ஒற்றியூர் எனவும் வழங்கப்படுகின்றது. பல்லவர் காலம் முதலே இக்கோயில் இருந்ததற்கானக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. சிவனடியார்களான அப்பர், சம்பந்தர், சுந்தரரால் பாடல் பெற்றத் திருத்தலம். கல்வெட்டுகளில் இவ்வூர் இறைவன் திருவொற்றியூர் இறைவன் என்றும், ஆதிபுரீஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார். இவ்வூரில்தான் சுந்தரர், மகிழ மரத்தடியில் சங்கிலி நாச்சியாரை மணந்து கொண்டார். அதனால் மகிழடி சேவை என்ற விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

இக்கோயிலை முழுவதும் கருங்கல் கோயிலாக கஜபிரஷ்டம் எனப்படும் தூங்கானை வடிவில் கட்டியவன் முதலாம் இராஜேந்திரன், இவ்வாறு கோயிலை கட்டப்பணித்தவர் சதுரான பண்டிதர் என்ற குரு இதனை கட்டிய சிற்பி ரவி என்கிற வீரசோழாந்தகன் ஆவான். இதனைச் சுற்றியுள்ள தூண்களுடன் கூடிய மண்டபமும் சோழர் காலத்தியதே ஆகும். தற்போது வட்டப்பாறை அம்மன் எனப்படும் அம்மன் கல்வெட்டுகளில் திருவட்டப்பிரை பிடாரியார் எனப்பட்டுள்ளாார்.

திருவெற்றியூர் நடராஜர் ஓடும் நடராஜர் எனப்படுகிறார். இச்சன்னதிக்கு முன்புள்ள மண்டபம் விஜயநகரக் கலைப்பாணியைக் கொண்டுள்ளது. நடராஜர் சன்னதிக்குப் பின்புறம் கொளலீஸ்வரர் அல்லது படம்பக்க நாயனார் சன்னதி முதலாம் வீரராஜேந்திர சோழன் சன்னதியுள்ளது. இவற்றைத் தவிர சுப்பிரமணியன், விநாயகர், வடிவுடையம்மன், சுவர்ணபைரவர் (சேத்திரபாலர்) சன்னதிகளும் உள்ளன. சென்னை மாநகரின் அருகில் உள்ள மிகப்பழமையானத் திருக்கோயிலாகும். இங்கு சோழர் காலத்திய ஓவியங்களின் எச்சங்கள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## திருமுல்லைவாயில்

மாசிலாமணீஸ்வரர் கோயிலும், பச்சையம்மன் கோயிலும் புகழ்பெற்றவை. கருவறை கஜபிரஷ்ட அமைப்பிலானது. சோழர் காலத்திய கல்வெட்டுகள் இங்குள்ளன. கோயிலும் சோழர் காலத்திய கலைப்பாணியை ஒத்துள்ளது. சுந்தரரின் தேவாரப்பதிகம் பெற்றத் திருத்தலம். கல்வெட்டுகளில் ஜெயம்கொண்ட சோழமண்டலத்தில், பூஞ்சார் கோட்டத்தில் கண்ணப்பேரூர் நாட்டில் இவ்வூர் இருந்துள்ளது. இங்குள்ள கல்வெட்டுகளில் பழமையானது கி.பி. 10–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். விநாயகர், சுப்பிரமணியர், சோழீஸ்வரர் ஆகிய சன்னதிகளும் உள்ளன. திருமுல்லைவாயில் கோபுரம் அழகிய சிற்பங்களுடன் காணப்படுகிறது.

### பாடி

திருவலிதயம் என அழைக்கப்படும் இவ்வூரிலுள்ள கோயில் இறைவன் திருவாலீஸ்வரர் என வழங்கப்படுகிறார். திருஞானசம்பந்தர் பதிகம் பெற்ற திருத்தலம். இங்கு காணப்படும் பழமையானக் கல்வெட்டு கி.பி.10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இக்கோயிலில் சோழர்கள், தெலுங்கு சோழர்கள், விஜயநகர அரசர்களின் கல்வெட்டுகள் உள்ளன. கல்வெட்டுகளில் ஜெயம்கொண்ட சோழமண்டலத்தில், விக்கிரம சோழ வளநாடு அல்லது புழல் கோட்டத்தில், அம்பத்தூர் நாட்டில் அமைந்துள்ளதாகவும் அக்காலத்தில் இவ்வூர் பாடியாகிய திருவலிதயம் என வழங்கப்பட்டதாகவும் தெரிகின்றது. இங்குள்ள பிள்ளையார் கோயில் சோழர் காலத்திலேயே கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் கருவறையும் கஜபிரஷ்ட அமைப்புடன் உள்ளது. கருவறை தேவகோட்டங்களில் தெற்கிலிருந்து முறையே விநாயகர், தட்சிணாமூர்த்தி, மேற்கில் மகாவிஷ்ணு, வடக்கில் பிரம்மா, துர்க்கை ஆகியோர் காணப்படுகின்றனர்.

இக்கோயிலின் முன்மண்டபமும் சோழர் காலத்தியது இதன் அருகில் வடக்கில் ஜெகதாம்பிகை மற்றும் நடராஜருக்கு என தனிச்சன்னதிகள் உள்ளன.

### திருமழிசை

பூந்தமல்லிக்கு அருகில் உள்ள ஊர் திருமழிசை. இங்கு ஜெகந்நாதப் பெருமாள் கோயிலும், ஒத்தண்டீஸ்வரர் என்ற சிவன் கோயிலும் உள்ளன. இவை சோழர் காலத்தியவை என்பதற்கானச் சான்றாக இக்காலத்தியக் கல்வெட்டுகள் உள்ளன. வைணவ ஆழ்வார்களில் ஒருவரான திருமழிசை ஆழ்வார் பிறந்த ஊராகும்.

### பூந்தமல்லி

தற்போது சென்னையை அடுத்துள்ள இவ்வூரில் வரதராஜப் பெருமாள் கோயிலை கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் திருகச்சி நம்பி கட்டியுள்ளார். இக்கோயில் விமானம் ஐந்து தளங்களுடன் அழகியத் தோற்றத்துடன் உள்ளது. மேற்கில் வரதராஜப்பெருமாள் சன்னதி,

கிழக்கில் ஸ்ரீரங்கநாதர் சன்னதி மற்றும் தெற்கு நோக்கி திருகச்சிநம்பி சன்னதிகளும் ஒரே பிரகாரத்தில் காணப்படுகின்றன. மூன்று சன்னதிகளிலும் விமானம் ஒரே உயரத்தில் கட்டப்பட்டுள்ளன. இக்கோயிலில் கி.பி. 13, 14 மற்றும் 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இதே ஊரில் வைத்தியநாத சாமித் திருக்கோயில் உள்ளது. இங்கு இரண்டாவது பிரகாரத்தில் முதலாம் இராஜராஜனின் கல்வெட்டு காணப்படுகின்றது. கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற திருப்பணிகளால் கோயில் புதிதாகக் கட்டப்பட்டத் தோற்றத்துடன் திகழ்கின்றது.

பூந்தமல்லியில் உள்ள மசூதியில் உள்ள பாரசீகக் கல்வெட்டு கி.பி. 1653-இல் கட்டப்பட்டச் செய்தியைக் கூறுகிறது. சுல்தான் அப்துல்லா குதுப்ஷாவின் ஆட்சிகாலத்தில் நவாப் பீர்ஜும்லாவின் வேலையாளான ரஸ்டம் என்பவரால் கட்டப்பட்டுள்ளது. இவனின் தந்தை அஸ்டிராபாத்தைச் சேர்ந்த துல்பீகுயர் ஆவார்.

**திருத்தணி**

திருத்தணி, திருவள்ளூர் மாவட்டத்தில் சென்னை - திருப்பதி (85 கி.மீ. தொலைவு) இரயில் மார்க்கத்தில் அரக்கோணத்தை அடுத்துள்ளது. சென்னையிலிருந்து பேருந்து வசதியும் உண்டு.

ஆறுபடை வீடுகளில் வள்ளியை மணந்த தலம் திருத்தணிகை. ஆறுபடை வீடுகளில் ஐந்தாவது படைவீடு. முருகப்பெருமான் தேவர்களின் துயர்தீர்க்க சூரபத்மனை வென்றும், வள்ளியை மணக்க வேடர்கள் நடத்திய விளையாட்டில் வென்றும் மனம் தணிந்து கனிந்து அமர்ந்த தலமாதலால் திருத்தணி எனப் பெயர்பெற்றது.

இலக்கியங்களில், தணிகை மாமலை, திருத்தணி மேவும் பெருமாள், நீலவெற்பு, குவளைச் சிகரி எனப் பலவாறு வழங்கப்படுகிறது. திருத்தணியல் என்று அபராஜித பல்லவ மன்னன் காலக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோழர் காலத்தில் 'திருத்தணியர்' என்றும் அதன்மேல் உள்ள மலை திருமலை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வூர் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து (தற்போதைய திருவள்ளூர் மாவட்டம்) மேலூர் கோட்டத்து (தற்போதைய திருத்தணி வட்டம்) ஓகவல் நாட்டு (தற்போதைய திருத்தணி) பெருங்காஞ்சி கீழ்ப்பிடாகையான அகுவூர் திருத்தணியற் என்று கல்வெட்டுகளில் அமைவிடம் பற்றிய செய்தி காணப்படுகிறது.

இதே கல்வெட்டில் 'திருமலை' மேலேளுந்தருளி நிற்கும் சுப்ரமணிய பிள்ளையாற்கு எனக்குறிக்கப்பட்டுள்ளதால் இறைவன் சுப்பிரமணிய பிள்ளையார் என்றே வழங்கப்பட்டுள்ளார்.

சுப்பிரமணியர் கோயிலுக்கு சரவணப்பொய்கை முதல் 368 படிகளைக் கடந்து மேலேறிச் செல்லவேண்டும். தற்போது மேலே செல்ல தேவஸ்தானத்தால் பேரூந்து இயக்கப்படுகிறது.

நான்கு திருச்சுற்று அல்லது பிரகாரங்களுடன் திருக்கோயில் உள்ளது. முதல் திருச்சுற்றில் முருகப்பெருமானின் சன்னதி உள்ளது.

இறைவன் சுப்பிரமணியர் அல்லது ஞானசக்திதரன் என்ற கோலத்தில் பக்தர்களுக்குக் காட்சியளிக்கின்றார். இருகரங்கள், வலக்கரத்தில் மூவிதழ்ச் சக்தியாகிய ஞானவேல் அமைந்திருக்கிறது. அவர்தம் தொடையின்மீது இடதுகரம் வைத்திருக்கும் திருக்கோலம் - மயிலின்றி நின்ற திருக்கோலம்.

வள்ளியம்மன் சன்னதி முருகரின் வலதுபுறம் உள்ளது. நின்ற திருக்கோலம் - வலதுகரம் தொங்கிய நிலையிலும் இடது கரம் தாமரை மலர் ஏந்தியும், தலையில் கரண்ட மகுடமும், பாதம் வரை ஆடைகளும் அலங்கரிக்கின்றன.

தெய்வாயானை சன்னதி சுப்பிரமணியர் சன்னதிக்கு இடதுபுறம் உள்ள தனிச் சன்னதி ஆகும். நின்ற திருக்கோலம் - இடது கரம் தொங்கிய நிலையில் வலது கரம் நீலோற்பல மலர் ஏந்தியும், தேவி காணப்படுகிறார். கரண்ட மகுடமும், கால்வரை செல்லும் ஆடையும் தெய்வயானையை அழகுறச் சித்தரிக்கின்றன.

அர்த்தமண்டபத்தில் தெற்குக் கோட்டத்தில் விநாயகர், வடக்கில் துர்க்கை, சண்டிகேசுவரர், முருகப்பெருமான் ஆகிய இறைஉருவங்கள் காணப்படுகின்றன.

பாலசுப்பிரமணியர் சன்னதி முதல் திருச்சுற்றில் மேற்குப்பகுதியில் உள்ளது. மேல் திருக்கைகளில் அக்கமாலை, கமண்டலமும் ஏந்தியும் கீழிருகைகள் அபயம், கடிஹஸ்தம் முத்திரைகளிலும் உள்ளன. வயிற்றில் உதரபந்தம், தலையில் கரண்ட மகுடம், நெற்றியில் முருகனுக்கே உரித்தான கண்ணிமாலை, காதுகளில் குண்டலங்கள் காட்சியளிக்கின்றன. இச்சிற்பத்தின் திருவுருவ அமைப்பு பல்லவர் காலத்தினை ஒத்துள்ளதால் வேலஞ்சேரி செப்புப் பட்டயம் மற்றும் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் சுப்பிரமணியர் இவராகத்தான் இருத்தல் வேண்டும்.

இரண்டாம் திருச்சுற்றில், தெற்குச் சுவற்றில் காஞ்சி ஏகாம்பரர் சன்னதியும், பள்ளியறையும், அர்த்தநாரீஸ்வரர் கோயிலும். மேற்கில் அருணாசலீஸ்வரர், சிதம்பரேஸ்வரர் சன்னதிகளும் உள்ளன.

ஆறுதலைகளுடன், பன்னிருகரங்களுடன் ஆறுமுகர் அல்லது ஷண்முகர் சன்னதி உள்ளது. இத்திருக்கோயில் சண்முகர் ஆலயம் என்று அழைக்கப்படுகிறது. இத்திருச்சுற்றில் சந்தனக்கல் தேவேந்திரன் தன் மகளுக்கு சீதனமாகக் கொடுத்தது உள்ளது. இதில் அரைக்கப்படும் சந்தனம் முருகனுக்குச் சாத்தப்படுகிறது.

ஆறுமுகர் சன்னதி. ஆபத்சகாய விநாயகர், அருணகிரிநாதர், நவவீரர்கள், வீரபத்திரர், சூரியன் ஆகியோரது சிற்பங்கள் உள்ளன. ஆபத்சகாய விநாயகர்தான் தன் தம்பி முருகனுக்காக, யானை உருவம் கொண்டு வள்ளியை பயமுறுத்தி மணம் முடிக்கக் காரணமாக இருந்தவர்.

மூன்றாம் திருச்சுற்று கிழக்கில் ஸ்ரீகுந்தாம் செங்கல்வராயர் புதுப்பித்த கோபுரம், கொடிக்கம்ப விநாயகர், ஐராவத சன்னதி ஆகியவை உள்ளன.

ஐராவதம் இந்திரனின் வாகனம். இதனை முருகனுக்கு சீதனமாக தன் மகள் தேவசேனாவுடன் அனுப்பிவைத்தான். ஐராவதம் முருகனுடன் சென்றதால் இந்திரலோகம் பொலிவிழந்தது. இருந்தபோதும் ஐராவதத்தைத் திரும்பப் பெற விரும்பாத இந்திரன், அது கிழக்கில் உள்ள தனது இந்திரலோகத்தினை நோக்கியிருந்தால் போதும் என வேண்டியதால், ஐராவதம் கிழக்கு திசை நோக்கியுள்ளது.

நான்காம் திருச்சுற்றில் கடைகள், அறநிலையத்துறை அலுவலகங்கள், தங்கத்தேர் மண்டபம் ஆகியவை உள்ளன.

இத்திருச்சுற்று நுழைவாயிலின் தென்புறத்தில் பிரசன்னநாதர் ஈசுவரர் சன்னதி உள்ளது. காதர் என்ற பெயருடைய நவாப் அமைத்த லிங்கமும், சர்வவாத்திய மண்டமும் உள்ளது. இது இந்து - முஸ்லீம் சமயப்பொறையை நினைவு கூறுகின்றது.

திருத்தணியில் பங்குனி உத்திரத் திருவிழா சிறப்பாக நடத்தப் படுகின்றது. மாசிமாதம் வள்ளித்திருமண விழா, மகாசிவராத்திரியில் முருகனுக்கு 1008 சங்காபிஷேகம், ஆடிக்கிருத்திகையில் தெப்பத் திருவிழா, ஐப்பசியில் கந்தர் சஷ்டி விழா, வைகாசி விழா போன்றவை கொண்டாடப்படுகின்றன. மேலும் மாதக் கிருத்திகை வழிபாடு மற்றும் நாள்தோறும் 5 கால பூஜையும் (காலை 8 மணி சந்தி, 10 மணி உச்சிக்காலம், மாலை 5 மணி சாயரட்சை, இரவு 8 மணி அர்த்த சாமம், இரவு 8.45 மணி பள்ளியறை) இங்கு நடத்தப்படுகின்றன.

முருகன் சினம் தணிந்து அமர்ந்த தலமாதலால், இங்கு சூரசம்ஹார விழா கொண்டாடப்படுவதில்லை.

ஆங்கிலப் புத்தாண்டு தொடங்கும் டிசம்பர் 31 நள்ளிரவிலிருந்து ஜனவரி 1-ஆம் தேதி வரை 368 படிகள்தோறும் பூஜை செய்து, திருப்புகழ் பாடல்களைப் பாடி பக்திப்பரவசம் அடையும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டிலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள ஆனூரில் உள்ள பெருமாள் கோயிலில் உள்ள கல்வெட்டில்

பிராமணர் ஒருவருக்கு நிலம் தானம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலம் முன்பு திருத்தணியில் உள்ள சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது எனத் தெரிகிறது. இக்கல்வெட்டு முதலாம் இராஜராஜனின் (கி.பி.999) 14-ஆம் ஆட்சியாண்டினைச் சேர்ந்தது. இதன் மூலம் திருத்தணி கோயிலுக்கு நிலம் செங்கல்பட்டில் ஒதுக்கப்பட்டுள்ள சிறப்பான தகவல் தெரியவருகிறது.

### திருவூர்

சென்னையில் ஓடும் கூவம் ஆற்றின் தென்கரையில், திருவள்ளூருக்குச் செல்லும் வழியில் சுமார் 40 கி.மீ. தொலைவில் உள்ள ஊர் திருவூர் ஆகும். கி.பி. 13-ஆம் நூற்றாண்டில், அதாவது பிற்காலப் பாண்டியர்களின் ஆட்சியில் இவ்வூர் சிறந்து விளங்கியது. வரலாற்றினை எடுத்தியம்பும் சான்றாக இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளும் கோயிலின் கட்டட அமைப்பும் விளங்குகிறது.

### உதிரிச் சிற்பங்கள்

இக்கோயிலின் கருவறை கிழக்கு நோக்கி உள்ளது. கோபுர வாயிலை அடுத்து, மகாமண்டபமும், முன் மண்டபமும் உள்ளன. மகாமண்டபத்தில் உள்ள தூண்கள் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் உள்ளன. இம்மகா மண்டபத்தில் இக்கோயிலைச் சார்ந்த துர்க்கை, பைரவர், விஷ்ணு போன்ற உதிரிச் சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன.

### பாண்டியரி கோயிற் பணி

முதலாம் ஜடாவர்ம சுந்தர பாண்டியனின் கல்வெட்டுத் தொடங்கித் தெலுங்குச் சோழ மன்னனான விஜய கண்டகோபாலன் கல்வெட்டு மற்றும் விஜயநகர அரசர்களின் கல்வெட்டுகள் வரையில் 12 கல்வெட்டுகள் இங்குள்ளன. கி.பி 13-ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் ஆண்ட சோழர்கள் வலிமை குன்றியபோது, மதுரையை ஆண்ட பாண்டியர்கள் சோழ மன்னர்களை வெற்றி கொண்டு அவர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்த தமிழகத்தின் வடவெல்லையான திருவேங்கடம்

வரை வந்துள்ளனர். அதற்கு அடையாளமாகப் பல கோயில்களைக் கட்டியும், சில கோயில்களுக்கு நிவந்தங்களை அளித்தும் சென்றுள்ளனர்.

### திருவூர்க் கோயில்

இப்பாண்டியர்களில் முதலில் திருவேங்கடம் வரை தன் படைபலத்தைப் பெருக்கியவன் முதலாம் ஜடாவர்ம சுந்தர பாண்டியன் (கி.பி. 1251-1284) ஆவான். இவனது 11-ஆம் ஆட்சியாண்டில் அதாவது கி.பி. 1261-ல் திருவூர் கோயில் கற்கோயிலாகக் கட்டப்பட்டது. இதனை ஒழுகரை எனப்படும் குலோத்துங்க நல்லூரைச் சேர்ந்த திருவண்ணாமலை உடையான் என்பவன் கட்டியுள்ளான். இவன் வெண்பையூர் என்றும் துகடூர் என்றும் வழங்கப்படும் இடத்தில் தலைவன் எனக் குறிப்பிடப் பட்டுள்ளான். இதே மன்னனின் இதே ஆட்சியாண்டைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டில் இவன் மலையன் திருவண்ணாமலை உடையான் என்றும் வழங்கப்பட்டுள்ளான். இதே மன்னனின் 18-ஆவது ஆட்சி யாண்டில் (கி.பி. 1268) ஒழுகரையைச் சேர்ந்த குலத்தறையன் ஆகிய பெரியாண்டவன் என்ற வணிகன் இக்கோயிலுக்கு நிலத்தினைத் தேவதானமாக அளித்துள்ளான்.

### கோயில் கணக்குகள்

பாண்டியர்களுக்கு பின்னர் தெலுங்குச் சோழ மன்னனான விஜயகண்ட கோபாலனின் 18-ஆம் ஆட்சியாண்டில் இக்கோயில் கணக்குகள் பிச்சாண்டவனான வில்லவரையன் என்பவனால் சீர் செய்யப்பட்டன. அப்பொழுது அயத்தூர் என்ற பழைய தேவதான கிராமம் இம்மன்னனின் 17-ஆம் ஆட்சியாண்டு வரை கோயில் கணக்கில் இல்லாதது கண்டுபிடிக்கப்பட்டது. இதனை நேர் செய்ததுடன், அதிலிருந்து கிடைத்த வருவாய் இக்கோயிலில் சித்திரை மாதத்தில் விழா நடத்தவும் பயன்படுத்தப்பட்டது.

### திருசுவூர் என்ற திருவூர்

இதே இக்கல்வெட்டின் மூலம் இக்கோயில் இறைவன் பெயர் ரிஷ்யசிங்கீஸ்வரார் எனவும், திருவூர், பெருமளையூர் என்ற ஊரின் ஒரு பகுதியாக இருந்துள்ளது என்றும் தெரிகிறது. (இப்பெருமுளையூர்

தற்போது பெருமாள்பட்டு என வழங்கப்படுகிறது) இக்கல்வெட்டின் மூலம் உலகளந்த சோழ சதுர்வேதிமங்கலமான பெருமுளையூர் ஈக்காடு கோட்டத்தில் இருந்துள்ளது தெரிகிறது.

## திம்மைய தேவரி கல்வெட்டு

கோயிலின் நுழைவாயிலில் உள்ள விஜயநகர அரசர் சாளுவ வம்சத்தினைச் சார்ந்த திம்மைய தேவரின் காலத்திய கல்வெட்டில் இவனுக்கு முன்னர் ஆட்சிபுரிந்த திப்பைய தேவரின் நினைவாக கி.பி. 1502-ஆம் ஆண்டு, இவ்வூர் மகாஜனங்களும், கேசவராயன் என்பவனும் நியாய கட்டணமாகதான் அளிக்க வேண்டிய தொகைக்கு தென்னந்தோப்பினை வாங்கிக் கோயிலுக்குத் தானமாக அளித்துள்ளனர்.

## இம்மடி திருமலை நாயக்கரி கொடை

கி.பி. 1519-ல் கிருஷ்ண தேவராயரின் பிரதானியான இம்மடி திருமலைநாயக்கரும் திருவூர் மகாஜனங்களும் சேர்ந்து திருவூரின் அருகிலுள்ள வரதராஜபட்டு, மகாமண்டல புருஷன்பட்டு ஆகிய கிராமங்களிலிருந்து வசூலிக்கப்பட்ட நீர்க்கூலி எனப்பட்ட தண்ணீருக் கான வரியாகிய 6 பொன்னை இக்கோயிலுக்கு வழங்கியுள்ளனர்.

## கல்வெட்டில் தமிழ் நிகண்டு

கிருஷ்ண தேவராயர் காலத்தில் தமிழ் நிகண்டினை தொகுத்தவர் பெயர் மகாமணடலப் பருஷர் இவரது பெயராலேயே மகாமண்டலப் பருஷன்பட்டு என்று கிராமத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது. கிருஷ்ண தேவராயரின் கி.பி. 1527-ஆம் ஆண்டில் இம்மடி திருமலை நாயக்கரின் பிரதானியாக சதாசிவ நாயக்கர் என்பவர் திருமலை எனப்பட்ட திருவூர் சிங்கீசுவரம் உடைய நாயனார் கோயிலுக்கு மடவிளாகமாக வீடுகட்ட நிலத்தினை இவ்வூர் மக்களிடமிருந்து வாங்கி வழங்கியுள்ளான்.

விஜயநகர ஆரவீடு வம்சத்தின் வழி வந்த வெங்கடாத்திரி மன்னர் இக்கோயிலில் உள்ள கரிய மாணிக்க பெருமாளுக்கு திருவூர் மற்றும் பெருமுளைப்பட்டு ஆகிய இடங்களிடமிருந்து பெறப்பட்ட வருவாயை

நிவந்தமாக வழங்கியுள்ளார். இதில் சிவராம நரசப்ப நாயக்கர் என்பவர் அரசரின் பிரதானியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

**சிங்கீசுவரம் உடையார் கோயில்**

கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டில் கருவறை முகப்பான, முகமனையினை இவ்வூரைச் சேர்ந்த அணுக்கி புருஷோத்தம்மன் பட்டர் வரதன் என்பவர் செய்து வழங்கியுள்ளார். அட்டகப் பிள்ளையார் என்ற பிள்ளையார் கோயிலில் இரவில் விளக்கெரிக்கவும், பூஜைக்காகவும் சிங்கீசுவரம் உடையார் கோயிலிருந்து தனக்குச் சேர வேண்டிய பணம் மற்றும் நெல்லினைத் தானமாக வழங்கியுள்ளார்.

**அட்டகப் பிள்ளையார்**

இக்கல்வெட்டு குறிப்பிடப்பட்ட அட்டகப் பிள்ளையார் தற்போது கூவம் ஆற்றில் மேற்குக் கலையில் உள்ள சிறிய பிள்ளையார் கோயிலாக இருத்தல் வேண்டும். மற்றொரு கோயிலான எல்லையம்மன் தற்போது ஓசூர் அம்மன் என வழங்கப்படுகிறது. இக்கோயில் இவ்வூரின் தென்மேற்கு கரையில் உள்ளது. இங்கு காணப்படும் கல்வெட்டில் திருகூவரைச் சேர்ந்த மகாஜனங்கள், எல்லையம்மன் கோயிலுக்கு ஸ்ரீநகர தோட்டமாகத் தோட்டத்தினைத் தானமாக அளித்துள்ளனர்.

**பாண்டியர் கலைப்பணி**

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த பாண்டியரின் கலைப் பணிக்கும் கட்டடக் கலைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகவும், பிற்காலத்திய விஜயநகர அரசர்களால் நன்கு போற்றிப் பாதுகாக்கப்பட்ட திருவூர்த் திருக்கோயில் தற்போது கேட்பாரற்று, கால்நடைகளின் இருப்பிடமாகத் திகழ்கின்றது.

## பிற்சேர்க்கை I

## திருவள்ளூர் மாவட்டத்தில் தோன்றிய பெரியோர்கள்

### I சைவப்பெரியோர்

| பெயர் | ஊர் |
|---|---|
| 1. கலியர் | திருவொற்றியூர் |
| 2. பூசலார் | திருநின்றவூர் |
| 3. மூர்க்கர் | திருவேற்காடு |

### II வைணப்பெரியோர்

| | |
|---|---|
| 1. திருகச்சிநம்பி | பூவிருந்தவல்லி |
| 2. திருமழிசை ஆழ்வார் | திருமழிசை |

## பிற்சேர்க்கை II

## திருவள்ளூர் மாவட்ட சிவத்தலங்கள்

| | | |
|---|---|---|
| 1. ஆலங்காடு | ஊர்த்தவ தாண்டவப்பெருமாள் | 2497-2506 |
| 2. இலம்பையங்கோட்டூர்(திருவள்ளூர்) | சந்திரசேகரர் | 820-830 |
| 3. ஊறல்(திருவள்ளூர்) | உமாபதீஸ்வரர் | 1143-1151 |

| | | |
|---|---|---|
| 4. ஒற்றியூர் | மாணிக்க தியாகர் | 3405-3415 |
| 5. கள்ளில்(திருவள்ளூர்) | சிவாநந்தேசுவரர் | 1282-1292 |
| 6. பாசூர்(திருவள்ளூர்) | பாசூர்நாதர் | 2113-2123 |
| 7. மாற்பேற(திருத்தணி) | மால்வணங்கீசர் | 591-600 |
| | | 1228-2137 |
| | | 5184-5185 |
| | | 5820-5837 |
| 8. வடமுல்லைவாயில்(திருவள்ளூர்) | மாவிலாமணிநாதர் | 7038-7047 |
| | | 7922-7932 |
| 9. விற்கோலம் | திருபுராந்தகர் | 3042-3051 |
| 10. வெண்பாக்கம்(திருவ) | வெண்பாக்கநாதர் | 8126-8136 |
| 11. வேற்காடு | வேற்காட்டீசர் | 612-622,273 |

## மங்களா சாஸனம் பெற்ற வைணவத்தலங்கள்

| ஊர் | இறைவன் | பாடல் எண் |
|---|---|---|
| 1. திருஎவ்வுள்(திருவள்ளூர்) | வீரராகவப்பெருமாள் | மங். 1058-1067,2674,2417 |
| 2. திருநின்றவூர்(திருவள்ளூர்) | பக்தவச்சலன் | மங். 1089,1642 |

# பிற்சேர்க்கை III

## ஆவணம் இதழில் வெளிவந்துள்ள கல்வெட்டுகள்

| வ.எண். | ஊர் | வட்டம் | தொகுதி/ வ. எண். |
|---|---|---|---|
| 1. | புள்ளப்பாக்கம் | திருவள்ளூர் | 5-4 |
| 2. | திருநின்றவூர் | திருவள்ளூர் | 7-48 |
| 3. | வீரநத்தம் | திருவள்ளூர் | 7-35 |

## I திருவள்ளூர் மாவட்டம்

| ஊர் | வட்டம் | ஆண்டு | கல்வெட்டு எண் |
|---|---|---|---|
| 1. அக்காரபாக்கம் | திருவள்ளூர் | 1949-50 | 206 |
| 2. அமிதாநல்லூர் | திருவள்ளூர் | 1949-50 | 207-208 |
| 3. அரன்வாயில் | திருவள்ளூர் | 1947-48 | 39-44 |
| 4. ஆற்றம்பாக்கம் | திருவள்ளூர் | 1968-59 | 397 |
| 5. அருகத்துறை | பொன்னேரி | 1941-42 | 82 |
| 6. சிந்தாமணி | பொன்னேரி | 1933-34 | 17-20 |
| 7. சித்தம்பாக்கம் | திருவள்ளூர் | 1944-45 | 26-27 |
| 8. தேவந்தவாக்கம் | திருவள்ளூர் | 1958-59 | 398 |
| 9. ஏலம்பாக்கம் | திருவள்ளூர் | 1947-48 | 45 |

| | | | |
|---|---|---|---|
| 10. எருமைவெட்டிபாளையம் | பொன்னேரி | 1929-30 | 168 |
| 11. குறுவளல் | திருவள்ளூர் | 1949-50 | 209 |
| 12. இலுப்பை | திருவள்ளூர் | 1949-50 | 210 |
| 13. இருளஞ்சேரி | திருவள்ளூர் | 1947-48 | 46-53 |
| 14. கச்சூர் | திருவள்ளூர் | 1950-51 | 224-226 |
| 15. கடம்பத்தூர் | திருவள்ளூர் | 1923 | 22 |
| 16. காக்களூர் | திருவள்ளூர் | 1947-48 | 54 |
| 17. கலவை | திருவள்ளூர் | 1901 | 228-232 |
| 18. கன்னிகைப்பேர் | திருவள்ளூர் | 1949-50 | 211-216 |
| 19. காராணைநிசாம்பெட் | திருவள்ளூர் | 1952-53 | 230-233 |
| 20. கருங்குழி | பொன்னேரி | 1960-61 | 279-281 |
| 21. காட்டூர் | பொன்னேரி | 1912 | 249-256 |
| 22. கிளாம்பாக்கம் | திருவள்ளூர் | 1952-53 | 234 |
| 2 3. கீழாம்பூர் | திருவள்ளூர் | 1934-35 | 6 |
| 24. கொப்பூர் | திருவள்ளூர் | 1949-50 | 217 |
| 25. கோவில்குப்பம் | திருவள்ளூர் | 1947-48 | 56-57 |
| 26. குன்னவளம் | திருவள்ளூர் | 1952-53 | 235 |
| 27. கூவம் | திருவள்ளூர் | 1909 | 322-350 |
| 28. கூவம் | திருவள்ளூர் | 1912 | 30 |

| | | | |
|---|---|---|---|
| 29. கூவம் | திருவள்ளூர் | 1947-48 | 58-59 |
| 30. மாடம்பாக்கம் | பொன்னேரி | 1911 | 318-325 |
| 31. மடவிளாகம் | திருவள்ளூர் | 1926 | 483-490 |
| 32. மதுரவாசல் | திருவள்ளூர் | 1949-50 | 218 |
| 33. மப்பேடு | திருவள்ளூர் | 1947-48 | 60-61 |
| 34. மேலூர் | பொன்னேரி | 1916 | 137-143 |
| 35. மெய்யூர் | திருவள்ளூர் | 1958-59 | 399-404 |
| 36. மீஞ்சூர் | பொன்னேரி | 1916 | 133-136 |
| 37. மும்மக்குப்பம் | திருவள்ளூர் | 1947-48 | 62 |
| 38. நாகலாபுரம் | பொன்னேரி | 1904 | 619-629 |
| 39. நரசிங்கபுரம் | திருவள்ளூர் | 1896 | 237-250 |
| 40. நத்தம் | பொன்னேரி | 1912 | 260-269 |
| 41. நயப்பாக்கம் | திருவள்ளூர் | 1959-60 | 261 |
| 42. நுங்கம்பாக்கம் | திருவள்ளூர் | 1947-48 | 63 |
| 43. ஒடப்பை | திருவள்ளூர் | 1958-59 | 405 |
| 44. பாப்பாரம்பாக்கம் | திருவள்ளூர் | 1949-50 | 219 |
| 45. பட்டரைப்பெரும்பூதூர் | திருவள்ளூர் | 1952-53 | 236-249 |
| 46. பேரண்டூர் | திருவள்ளூர் | 1953-54 | 303 |
| 47. பேரம்பாக்கம் | திருவள்ளூர் | 1947-48 | 64-77 |

| | | | |
|---|---|---|---|
| 48. பேராத்தூர் | திருவள்ளூர் | 1944-45 | 7-8 |
| 49. பெரியபாளையம் | திருவள்ளூர் | 1953-54 | 304 |
| 50. பெருமடிவாக்கம் | திருவள்ளூர் | 1949-50 | 201 |
| 51. போளிவாக்கம் | திருவள்ளூர் | 1947-48 | 78 |
| 52. புதுப்பட்டு | திருவள்ளூர் | 1947-48 | 79 |
| 53. புலியூர் | திருவள்ளூர் | 1944-45 | 15-16 |
| 54. பூண்டி | திருவள்ளூர் | 1952-53 | 250 |
| 55. புன்னப்பாக்கம் | திருவள்ளூர் | 1949-50 | 221 |
| 56. பூரிப்பாக்கம் | திருவள்ளூர் | 1949-50 | 221 |
| 57. ராமஞ்சேரி | பொன்னேரி | 1952-53 | 252-258 |
| 58. ராமகிரி | பொன்னேரி | 1904 | 630 |
| 59. ராமகிருஷ்ணராஜுபேட்டை | புத்தூர் | 1967-68 | 139-140 |
| 60. ராமன்கோயில் | திருவள்ளூர் | 1943-45 | 20-21 |
| 61. சத்யவேடு | பொன்னேரி | 1912 | 31-34 |
| 62. செஞ்சி | திருவள்ளூர் | 1934-35 | 159-165 |
| 63. செஞ்சிஅகரம் | திருவள்ளூர் | 1953=54 | 305 |
| 64. சத்தரை | திருவள்ளூர் | 1947-48 | 80-82 |
| 65. சித்தம்பாக்கம் | திருவள்ளூர் | 1929-30 | 166-167 |
| 66. சிவன்கோயில் | திருவள்ளூர் | 1944-45 | 10-14 |

| | | | |
|---|---|---|---|
| 67. சுருட்டப்பள்ளி | பொன்னேரி | 1928-29 | 378-380 |
| 68. தண்ணிக்குளம் | திருவள்ளூர் | 1944-45 | 17 |
| 69. தென்காராணை | திருவள்ளூர் | 1947-48 | 83 |
| 70. திருப்பாச்சூர் | திருவள்ளூர் | 1896 | 406-407 |
| 71. திருப்பாச்சூர் | திருவள்ளூர் | 1929-30 | 107-158 |
| 72. திருப்பாலைவனம் | பொன்னேரி | 1928-29 | 307-377 |
| 73. திருப்பந்தியூர் | திருவள்ளூர் | 1947-48 | 84-86 |
| 74. திருவாய்பாடி | பொன்னேரி | 1933-34 | 16 |
| 75. திருவெள்ளவாயில் | பொன்னேரி | 1912 | 247-248 |
| 76. திருவிளம்பூதூர் | திருவள்ளூர் | 1940-41 | 112-134 |
| 77. திருவூர் | திருவள்ளூர் | 1947-48 | 87 |
| 78. திண்ணனூர் | திருவள்ளூர் | 1937-38 | 168-177 |
| 79. தொடுக்காடு | திருவள்ளூர் | 1947-48 | 88-89 |
| 80. உளுந்தை | திருவள்ளூர் | 1933 | 90-91 |
| 81. வடமதுரை | திருவள்ளூர் | 1952-53 | 259-263 |
| 82. வாயலூர் | திருவள்ளூர் | 1908 | 362-368 |
| 83. வெள்ளாத்துக் கோட்டை | திருவள்ளூர் | 1933-34 | 21-22 |
| 84. வெள்ளியூர் | திருவள்ளூர் | 1958-59 | 264 |
| 85. வேம்படு | திருவள்ளூர் | 1958-59 | 406 |

| | | | |
|---|---|---|---|
| 86. வெங்கல் | திருவள்ளூர் | 1952-53 | 265-267 |
| 87. வெங்கல் | திருவள்ளூர் | 1953-54 | 309-314 |
| 88. வெண்மணம்புதூர் | திருவள்ளூர் | 1944-45 | 23-24 |
| 89. வேப்பம்பட்டு | திருவள்ளூர் | 1947-48 | 92 |
| 90. விடையூர் | திருவள்ளூர் | 1902 | 18-19 |

## II தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதியில் கல்வெட்டுகளின் முழுவாசகங்கள் வெளியிடப்பட்டுள்ள தொகுதிகள்

| வ.எண். | ஊர் | வட்டம் | கல்வெட்டு எண். |
|---|---|---|---|
| 1. | சிந்தாமணி | பொன்னேரி | தொகுதி-XIII எண்.281-A |
| 2. | கூவம் | திருவள்ளூர் | தொகுதி-X எண்.763 |
| 3. | நாகலாபுரம் | திருவள்ளூர் | தொகுதி-XVII எண்.675-685 |
| 4. | நரசிங்கபுரம் | திருவள்ளூர் | தொகுதி-V எண்.880 |
| 5. | சத்யவேடு | பொன்னேரி | தொகுதி-XII எண்.86, 89 |
| 6. | திருத்தணி | திருத்தணி | தொகுதி-XIII எண்.82 |
| | - | - | தொகுதி-XIX எண்.388 |
| 7. | திருவலங்காடு | திருத்தணி | தொகுதி-III எண்.65,205 |
| | | | தொகுதி-V எண்.877-879 & 1363 |
| | | | தொகுதி-XII எண்.64, 66 |


32 திருவள்ளூர்

# கூவம்

திருவிற்கோலநாதர் திருக்கோயில் விமானத்தோற்றம், கூவம்









திருவிற்கோலநாதர் திருக்கோயில் விமானத்தோற்றம், கூவம்



தெலுங்கு கல்வெட்டு, கூவம்

கூவம் திருக்கோயில் கல்வெட்டுகள்







கல்வெட்டு



லிங்கோத்பவர்

## சிற்பங்கள்



தூண் சிற்பம்



நந்திதேவர்



தூண் சிற்பம்



விநாயகர்

# மப்பேடு

மப்பேடு, திருக்கோயில் கோபுரத்தின் விமானத்தோற்றம்







மப்பேடு, திருக்கோயிலின் கருவறை சுவரின் தோற்றம்



முனிவரின் சிற்பம்



கல்வெட்டு



கோபுர நுழைவாயிலில் காணப்படும் சிற்பங்கள்



சிற்பத்தின் அழகியத் தோற்றம்



தட்சிணாமூர்த்தி



சிவலிங்கமும், அனுமனும்

கோபுர நுழைவாயில் இராமாயணக் காட்சிச் சிற்பங்கள்







கோபுர நுழைவாயில் இராமாயணக் காட்சிச் சிற்பத் தொகுதி







கோபுர நுழைவாயில் இராமாயணக் காட்சிச் சிற்பத் தொகுதி







கோபுர நுழைவாயில் இராமாயணக் காட்சிச் சிற்பத் தொகுதி







# திருமுல்லைவாயில்



அருள்மிகு மாசிலாமணீஸ்வரர் திருக்கோயில்



முன்மண்டபம்



கண்ணப்பர்



லிங்கோத்பவர்



இசைக் கலைஞன்



ஏகாம்பரேஸ்வரர் - பார்வதி



இசைக்கலைஞர்



இசைக்கலைஞர்



நடராஜர்

# திருவாலங்காடு



திருவாலங்காடு திருக்கோயிலின் திருச்சுற்று மாளிகை



திருக்கோயிலின் கோபுரம் மற்றும் விமானத்தோற்றம்



திருக்கோயிலின் கோபுரம்
மற்றும் விமானத்தின்
அண்மைத் தோற்றம்



கல்வெட்டுகள்

கருவறையின் பக்கச்சுவர் தோற்றங்கள்







கருவறை பக்கச்சுவர்
அதிட்டானத்தின்
அண்மைத் தோற்றம்



பூரணக்கும்பத்தோற்றம்



யாளி வரிகளில் போர் வீரன் சிற்பம்



விஜயநகர அரசர்களின் இலச்சினை

# திருத்தணி திருக்கோயில்



சப்தமாதர்கள்



கல்வெட்டு



சூரியன்



விநாயகர்



தட்க்ஷிணாமூர்த்தி



திருமால்



துர்க்கை



விமானத்தோற்றம்



கஜபிரஷ்ட விமானத்தின் அண்மைத் தோற்றம்



ஆறுமுகசுவாமிச் சன்னதி



விஷ்ணு கோயில்

# திருவொற்றியூர் ஆதிபுரீஸ்வரர் திருக்கோயில்



அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட ஓவியம்



விமானத்தின் தோற்றம்



விமானத்தின் அண்மைத் தோற்றம்



விமானம் கோபுரத்தின் அழகியத் தோற்றம்



பல்லவர் கால சண்டிகேஸ்வரர்



கால பைரவர்





தூண் சிற்பங்கள்



விமானம் கோபுரத்தின் அழகியத் தோற்றம்

# பழவேற்காடு



அருள்மிகு சாம ஈஸ்வரர் கோயில்




**அருள்மிகு ஸ்ரீ ஆனந்தவள்ளி அம்பாள் கோயிலில் உள்ள மண்டபம்**





பழவேற்காடு கோயிலில் இராமாயணச் சிற்பங்கள்
செம்பூராங்கற்களால் செதுக்கப்பட்டுள்ளன





இராமாயணச் சிற்பத் தொகுதி

# டச்சுக்கல்லறை

நுழைவாயில் தோற்றம்







டச்சுக்கல்லறை நுழைவாயில் தோற்றம்








டச்சுக்கல்லறை



டச்சுக்கல்லறைகள்





டச்சுக்கல்லறை அண்மைத் தோற்றம்







டச்சுக்கல்லறை அண்மைத் தோற்றம்







# திருப்பாலைவனம்

திருப்பாலைவனம் கோயில் முகப்பு







விஷ்ணு, திருப்பாலீஸ்வரர் கோயில்

